உ
சிவமயம்

# ஆத்மஜோதி சிவஸ்ரீ பொன் சுதந்திரன் குருக்கள்

அவர்களின்

# தசாக அந்தியேட்டி

# நினைவு மலர்

## 04.06.2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு தி. மோகனதாஸ் அவர்கட்கு

ஆத்மஜோதி சிவஸ்ரீ பொன் சுதந்திரன் குருக்கள்

அவர்களின்

# தசாக அந்தியேட்டி

# நினைவு மலர்

**04.06.2019**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



ஆண்டு விகாரி அபர வைகாசி பிரதமை தன்னில்

பூண்ட ஞாயிறு சேர் அனுசம் - திதி அதனில்

குரு பொன் சுதந்திரன் ஐயா மாதுமை பங்கன் ஈசன்

பதநிலை அடைந்த நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆத்ம ஜோதி சிவஸ்ரீ பொன். சுதந்திரன் குருக்கள் ஐயாவின் வரலாற்றுப் பதிவுகள்

பொன்னையா காளிப்பிள்ளைகோர் புத்திரனாய் கல்முனை புற்கேணியில் ஆயுள் வேத வைத்தியர் நாகமணியின் பேரனாய், கலைக்கொழுந்தன், சிவபாக்கியத்தின் தம்பியுமாய் யோகேஸ்வரியின் அண்ணனுமாய் 1964.09.20 இலே அவதரித்தார்.

இளமை காலத்தில் பெற்ற தாய் ஒருவரும் இருந்த போதும் பிள்ளை இல்லா பெரியம்மா இருவருக்கும் செல்லப்பிள்ளையாக வளர்க்கப்பட்டு அறநெறியுடன் அன்புள்ளம் கொண்டவராக வாழ்ந்தார்.

ஆரம்ப கல்வியினை கல்முனை விவேகானந்தா தமிழ் வித்தியாலயத்தில் பயின்று இடைநிலைக்கல்வியினை கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையில் பூர்த்தி செய்து தனது இள வயதிலே இறை பாடல்களுக்கு இசைவடிவம் கொடுக்கும் மிருதங்க வாசிப்பில் மிளிர்ந்தார். ஆயுள்வேத வைத்திய பரம்பரைச் சேர்ந்த நாகமணியின் ஏட்டு சுவடிகள் வைத்திய நூல்களை கற்றதோடு மட்டுமல்லாது கண்ணகி காவியங்களை கருத்துடன் கற்றுக் கொண்டார். கண்ணகி ஆலயத்தின் உதவிப் பூசகராய் இறை சேவையை ஆரம்பித்தார்.

1991.12.11 இலே பாண்டிருப்பை சேர்ந்த முத்துவேல் தனலெட்சுமியை கரம் பிடித்து இல்லறத்தை நல்லறமாக கொண்டு மூன்று பெண் பிள்ளைகளை பெற்றிருந்தார்.

“மனைத் தக்க மாண்பு உடையள் ஆகித் தந் கொண்டான் வளத்தான் வாழ்க்கை துணை” என்பதற்கு இனங்க ஐயாவுடன் வாழ்ந்த பெருமை சிறப்பினைத் தரும். இசைப்பிரியரான ஐயா, மிருதங்கம், நாதஸ்வரம், உடுக்கை, தவில், தபேலா, பியானோ போன்றவற்றை இசைப்பதுடன் பாடுவதில் சாமர்த்தியவானும், அத்தோடு திருமுறைப் பாடல்களை இராக தாளத்துடன் இசைக்க கூடிய திறன் கொண்வர். ஐயாவின் கலை வண்ணத்தில் நாதஸ்வரம், ஸ்ரீச் சுருவம், திருவாசி போன்றவற்றை செய்வதில் தனது கைவண்ணத்தை காட்டியவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகன் ஆலயங்களுக்குரிய சூரபத் மனையும் செய்யும் வல்லமை கொண்டவர். பாண்டிருப்பு முருகன் ஆலயத்தில் பஜனையை ஆரம்பித்த கர்த்தாவும் இவரே ஆவார்.

கல்முனை கண்ணகி ஆலயத்தின் பூசகராய் இருந்த வேளையிலே 1993 இலே பாண்டிருப்பு சித்திர வேலாயுத சுவாமி ஆலய அர்ச்சகராய் தனது பணியை 22 வருடம் தொடர்ந்தார். 1998 இலே நற்பிட்டிமுனை அருள் மிகு ஸ்ரீ சிவசுப்ரமணிய தேவஸ்தானத்தில் தீட்சகுரு கிரியா கலாமணி பிரதிஷ்டா சிரோன்மணி சிவஸ்ரீ தி.மாணிக்கவாசகக் குருக்கள் (பிரதம சிவாச்சாரியார் யாழ் குரும்பசிட்டி அருள்மிகு முத்துமாரியம்மன் தேவஸ்தானம்) அவர்களால் விசேட நிர்வாண தீட்சையும் ஆசாரிய அபிஷேகமும் கிடைக்கப்பெற்றார்.

மேலும் ஐயா கல்முனை கடற்கரை கண்ணகி ஆலயத்தின் பிரதம அர்ச்சகராகவும், பாண்டிருப்பு ஸ்ரீ சித்திர வேலாயுத ஆலயத்தின் தேவஸ்த்தானத்தின் பிரதம குருவாகவும், குருந்தையடி சித்தி விநாயகர் ஆலயம், கல்முனை அம்பலத்தடி பிள்ளையார் ஆலயம், பாண்டிருப்பு மகா விஷ்ணு ஆலயம், சம்மாந்துறை காளி கோயில், மொனராகலை முத்துமாரியம்மன் ஆலயம், நற்பிட்டிமுனை வேம்படி விநாயகர் ஆலயங்களில் பிரதம குருவாக இறைபணி செய்தார்.

ஐயாவின் இறைபணியின் தொடராக பொத்துவில் பிள்ளையார் ஆலயம், வளத்தாப்பிட்டி நாகதம்பிரான் ஆலயம், கல்முனை ஐயனார் ஆலயம், அன்னமலை பிள்ளையார் ஆலயம், சவளக்கடை 7ம் கிராமம் சித்தி விநாயகர் ஆலயம், 4ம் கிராமம் கண்ணகி ஆலயம், கண்டி உளுகங்கை முத்து மாரியம்மன் ஆலயங்களில் உற்சவகால பிரதம குருவாக இறைபணியைத் தொடர்ந்தார்.

இறையருளால் இறைவனுக்கோர் கும்பாபிஷேகப் பெருவிழா செய்த ஆலயங்களான பாண்டிருப்பு ஸ்ரீ சித்திர வேலாயுதர் ஆலயம், நுவரெலியா கிளாசோ முத்துமாரியம்மன் ஆலயம், திருகோணமலை சேனையூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்ணகுலப் பிள்ளையார் ஆலயம், வீரமுனை கண்ணகி போன்ற ஆலயங்களில் பிரதம சிவாச்சாரியாராகவும் இறைபணி செய்தார்.

மேலும் கோட்டைக் கல்லாறு முருகன் ஆலயம், 15ம் கிராமம் முருகன் ஆலயங்களில் பஞ்சகுண்ட சிவாச்சாரயாராகவும் இறைபணியில் ஈடுபட்டார்.

இறைபணியோடு நின்று விடாமல் இலக்கியப் பணியையும் தொடர்ந்தார். அம்பாறை மாவட்ட எழுத்தாளர் பேரவையின் வெளியீட்டுக்கும் உறுப்பினராகவும், கவிஞராகவும், கிழக்கிலங்கை இந்து குருமார் ஒன்றியத்தின் உப செயலாளராகவும், பாண்டிருப்பு சிவில் பாதுகாப்பு குழு உறுப்பினராகவும், பாண்டிருப்பு மயூரா பாலர் பாடசாலையின் அதிபராகவும், கல்முனை ஆதார வைத்தியசாலையின் ஆலோசனைக்குழு உறுப்பினராகவும் தன் ஆளுமையை வெளிக்காட்டியுள்ளார்.

இறை சேவையின் நிமித்தம் ஈசான சிவாச்சாரியார் சிவாகம பிரதிஷ்டா சாகரர், சைவ சித்தாந்த சிரோண்மணி சோதிட சுதர்சனர், சாமஸ்ரீ, உத்தம குருமாமணி எனும் பட்டங்களைப் பெற்று கொண்டார். இத்துடன் 1018 இலே கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் கலைஞர் சுவதம் எனும் விருதினையும் 2015 இலே உத்தம குருமாமணி விருதினையும் பெற்றுக் கொண்டார். 2010 இலே சாமஸ்ரீ, சைவ சித்தாந்த சிரோண்மணி எனும் விருதினையும் பெற்றுக் கொண்டார்.

இத்துடன் வைத்தியப் பரம்பரையின் பெயர் காக்கும் சித்தாயுள் வேத வைத்தியராகவும் மனையடி சாஸ்திரம், கைரேகை சாஸ்திரம், எண் சோதிடம் போன்றவற்றிலும் மக்களின் மனமறிந்து இறைசிந்தனையுடன் பணியாற்றினார்.

ஐயா அவர்கள் சிறந்த பேச்சாளரும் ஆவார். குறிப்பாக ஆலயங்களிலே திருவிழாக்கள் நிறைவடைந்தும் ஆன்மீக வார்த்தைகளால் மக்கள் மனதிலே இடம் பிடித்த ஆன்மீகவாதியும் ஆவார். கந்தசஸ்டி விரதம் இதன் போது புராணபடனம் செய்வதில் வல்லவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டிருப்பு ஸ்ரீசித்திர வேலாயுத தேவஸ்த்தானம் உருவாக்கம் பெறுவதற்கு அயராது பாடுபட்டு ஆலயம் செம்மையா அமைக்கப்பெற வழிகாட்டியாய் அமைந்தார். இவரோடு சேர்ந்து முன்னாள் ஆலய தலைவர் தாமோதரம் அவர்களும் முழு மூச்சாக நின்று ஆலயம் உருவாக்கம் பெறவும் இறைவனுக்கு கும்பாபிஷேகம் கானும் கனவை 2015 இலே நனவாக்கி மண்டலாபிஷேகமும் அதனைத் தொடர்ந்து திரு விழாவையும் செவ்வனே செய்தார். ஐயா அவர்களின் குரு ஆசியுடன் கணேஷ் சர்மா, ராஜேந்திர சர்மா, கேதீஸ்வர சர்மா, ரூபன் சர்மா, ராம் சர்மா, ஹரிஸ் சர்மா, சதுர்ஷன் சர்மா ஆகிய மாணவ பரம்பரையை உருவாக்கி தன் பணியைத் தொடர வைத்துள்ளார்.

ஐயா அவர்கள் தன் வாழ்நாள் முழுவதும் இறைவனுக்கு தொண்டு செய்யும் பணியில் தன்னை மட்டுமன்றி தன் மனைவி மக்களையும் இணைத்துச் சேவையாற்றிய பெருமை இவரைச் சாரும். மற்றும் தன்னோடு தன் மருமக்களான பிரம்மஸ்ரீ இராஜகந்த யோ.சஞ்சீவ சர்மா, சிவஸ்ரீ. வ.டிமலேஸ்வர சர்மா இருவரையும் இணைத்து இறைபணியை தொடர வைத்துள்ளார்.

இவ்வாறாக வாழ்ந்து வந்த ஐயா அவர்கள் நோய்வாய்ப்பட்டு பூரண சுகமடைந்திருந்த வேளை தன் ஆயுளின் இறுதி வினாடியை அறிந்திருந்து நன்றாக பேசி என்னுடனும், தன் பிள்ளைகளுடனும் சரளமாகக் கதைத்துப் பேசி ஞாயிறு இரவு பசி என்று கேட்டு பாலை அருந்தி தூக்கத்திற்குச் சென்றார். அப்போது தான் தன் பிள்ளைகளிடம் நேரம் 12.45 எனக் கூறித் தூங்கி விட்டார். திடீரென என்னை அழைத்து அருகிலிருத்தி சிவனுக்கு உரிய மந்திரங்களைக் கூறி சிவனும் உமையும், வந்திருக்காங்க அம்மா என மூன்று தடவைகள் கூறி சிவ நாமத்தை உச்சரித்த வண்ணம் நீள்துயில் கொண்டு சிவனடி சேர்ந்து எங்களை மீளாத் துயரில் ஆழ்த்திய எம் ஐயாவின் ஆன்மா சாயுச்சிய முத்தி பெற்று நிலை பேறடைய எல்லாம் வல்ல உமைபங்கனை வழிபடும்

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவியின் இதயக் குமுறல்

“துறந்தாருக்கும் தூவாதவருக்கும் இறந்தாருக்கும் இவ்வாழ்வாள் துணை'' எனும் வள்ளுவர் வாக்குக்கிணங்க இல்லறத்தை நல்லறமாக்குவதற்காக என்னை கரம் பிடித்தீர்கள் ஐயா அன்றிலிருந்து என் வாழ்க்கையை பிரகாசிக்க செய்து கொண்டு இருந்தீர்கள். கண்ணை இமை காப்பது போல் எந்த குறையும் இல்லாமல் என்னை காத்து வந்தீர்கள். உற்றாரும் உறவும் மதிக்கும் வகையில் எனக்கு அந்தஸ்த்து தந்தீர்கள். என்னை தாய் ஸ்தானத்தில் வைத்து காத்தீர்கள். இத்தரனியில் போதும் என்ற அளவிற்கு நிறையாக செய்தீர்கள். இளைவளியை உம்பனி என்று இரவு, பகல் பாராது உழைத்த நீங்கள் உம் பணியில் என்னை இனைத்து கொண்டு ஆலய பணிகளை திறம்பட செய்தீர்கள்.

மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம் என அடிக்கடி கூறுவீர்கள். இருவரும் எங்கு சென்றாலும் இணைந்து சென்றோம். நல்ல தலைவராக, நற்தந்தையாக, நல்ல குருவாக வந்தார். ஐயா தேடி வருவோரை ஆதரிக்கும் அன்புள்ள கொண்ட ஐயாவே இனிதாக மூன்று மகள்களை வளர்த்து உயர் கல்வி கற்க வழி செய்தீர்கள். உங்களை பற்றி எழுதுவதற்கு வார்த்தைகள் இல்லை. இருந்தாலும் கண்ணீரோடு எழுதுகிறேன். தீட்சை மந்திரம் கூறுவது விதி என்று அறிந்து திடீரென சிவ மந்திரம் உச்சரித்து இறைவனின் திரு வழியில் சரன் புகுந்து ஈசான சிவாச்சாரிய திலகமே எம் ஐயாவே.

இறுதியாக பூசை செய்ததும் ஈசனுக்கே என்பதாலோ தெரியவில்லை சிவனும், உமையும் வந்து அழைத்தவுடன் எம்மை மறந்து சென்றீர்கள். ஐயா அவர்களுடன், அக்கணம் நினைக்கவில்லை எங்கு சென்றாலும் என்னை அழைத்துக் கொண்டு செல்வீர்கள். அன்று மட்டும் ஏனோ என்னை அழைக்காமல் போனீர்கள். என் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைந்த அனுதினமும் இறைவனை பிரார்த்திக்கின்றேன். உங்கள் இழப்பை இப்பூமியில் எவற்றினாலும் ஈடு செய்ய முடியாது. என் தலைவனின் ஆன்மா
அவள் அருளாள் அவன் தாழ்
சங்கமமாக வேண்டுகின்றேன்
ஓம் சாந்தி ஓம் ஓம் சாந்தி ஓம் சாந்தி

அன்பு மனைவி

தனலெட்சுமி சுதந்திரன் குருக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வமத செயற்பாட்டு ஒன்றியம் தலைவர் (RAA)



கிழக்கிலங்கை இந்து குருமார் ஒன்றியம் செயலாளர் திருமலை
தேசிய சமாதானப் பேரவை இணைத்தலைவர் திருமலை
ஆதி சைவ சிவப்பிராமண ஒன்றியம் (பாசுபத மரபு) செயலாளர்



"சிவாகம சிரோமணி" "வித்யாஞானகலாஜோதி"

### சிவ பிரம்மஸ்ரீ . இராஜ கந்தசாமி பத்மநாதக் குருக்கள்(J.P)

ஆதி கோணேஸ்வரம் பிரதம குரு

71.மின்சாரநிலைய வீதி,திருகோணமலை    பதிவிலக்கம் : HA/TM/0020

---

### *பாண்டிருப்பு ஈன்ற பரம ஞானி சாக்தஸ்ரீபொன் – சுதந்திரன் குருக்கள்*

### இரங்கலுரை

"நேற்றுருந்தார் இன்றில்லை" என்ற வள்ளுவர் வாக்கிற்கொப்ப இனறைக்கிருந்தாரை நாளைக்கிருப்பார் என்று எண்ணவோ திடமில்லையே'' என்ற தாயுமானவர் அருள் வாக்கை அர்த்தமுள்ளதாக்கி மறைந்த மாமனிதர்களுள் பொன் சுதந்திரன் குருக்கள் அவர்களும் ஒருவர்.

"குடம்பை தனித்தொழிய புன் பறப்பது" போன்றது. ஆன்மாவில் உறவுக்கூட்டை அமைத்து ஒட்டி உறவாடிய பறவை தன்னிறைவு பெற்றபின் பறந்துவிடுவது போல் ஐயா அவர்களும் இல்லற தர்மத்தை அமைத்தார், திளைத்தார், இறை ஐக்கியமானார்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்'' என்பதற்கொப்ப தொண்டுள்ளமும் சேவை நோக்கமே கடமையாகக் கொண்டார். இதன் நிமித்தம் சமய ஞான தீட்சைகள் கைவரப்பெற்றன. சமயப் பெரியோர்களின் தொடர்புகள் நாடி வந்ததை சமய சமூகப் பணிகளில் தம்மை முற்றுமுழுதாக அர்ப்பணித்தார்.

வாழையடி வாழையென வந்த திருக்கூட்டம் போல் மாந்திரீக, தாந்திரீக, சித்தவைத்தியத்துறைகளில் வல்லவனாகி தன்னைச் சார்ந்தோருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்திற்கும் அளப்பரிய தொண்டாற்றினார். சக்திதான் உலகின் ஆதாரம் என்பதை உணர்ந்து சாக்த உபாசகனாகி அம்பிகையின் உற்சவங்களை திறம்பட நடாத்தினார். உரிய காலத்தில் சமயாதி ஆசாரியாபிஷேத தீட்சைகளைப் பெற்றுக் கொண்டு சமய சமூகக் கடமைகளைத் திறம்பட செய்து மக்களின் அன்புக்குப் பாத்திரமானார்.

தந்தை மகற்காற்றும் உதவி அவயத்து முந்தியிருக்கச் செயல்; என்பதற்கொப்ப தனது மூன்று பெண் குழந்தைகளையும் பட்டதாரிகளாக்கி இன்புற்றார். "தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பதற்கொப்ப தன்னை நாடி வருவோருக்கும் உதவி ஒத்தாசைகள் புரிந்து பல் துறையில் வல்லவராக்கினார்.

உள்ளத்தால் பொய்யாதொழுகின் உலகத்தார்
உள்ளத்து எல்லாம் உளர்"

மனநீதிப்படி வாழ்பவன் என்றும் மக்கள் மனங்களில் நிறைந்திருப்பான்; என்கிறார் வள்ளுவப் பெருந்தகை. அன்பான பேச்சு, ஆழமான கருத்துக்கள், தூய்மையான உள்ளம், துணையான வார்த்தைகள், கருத்துக்களை துல்லியமாக வெளிப்படுத்தி இலகுவாக ஏற்றுக் கொள்ள வைக்கும் திறன். இயல்பான தாயன்பு, ஐயாவின் தனித்திறமை, தவறுகளைத் தண்டிப்பதில் தர்மராஜன், எம்மோடு உற்ற நண்பராக இருந்து சமய சமூக சேவைகளில் பணியாற்றியவர்.

பிறவி பூர்வீக வினைப்பயனால் ஏற்படுவதென்பது சித்தாந்த முடிவு. மானிடப்பிறவி மனித வாழ்வியலுக்கு மகத்தான வழிகாட்டும்; அதனாலன்றோ அவ்வையும்

'அரிது அரிது மானிடராதல் அரிது என்றார்'

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊதியம் இல்லை உயிர்க்கு என்ற குறளுக்கொப்ப குடும்பத்திற்கு உறுதுணையாய் பக்தியுடன் பண்பாளராகவும், ஆசாரசீலராகவும் இறுதிவரை தொண்டாற்றி வறியோர்க்கு உதவி சமுதாயத்தோடு இணைந்து வாழ்ந்த இக்குருவின் இழப்பு கிழக்கு மக்களுக்குப் பேரிழப்பாகும். பிரிவால் துயருறும் அவர் தம் குடும்பத்தினர், உற்றார் உறவினர்கள் அமைதிபெறவும் அன்னாரின் ஆத்மா சாந்தி பெறவும் கோணைநாயகப் பெருமானை இறைஞ்சிப் பிரார்த்திக்கின்றோம்.

முத்தமிழ் உணர்ந்தோன் முந்தையோர் மகிழவே
சித்தத்தெளிவோடு செய்வதெல்லாம் - சீராக
வைத்துப் பணிபுரிந்த மேதை பொன் சுதந்திரன் குருக்கள்
அந்தன் அருளாலே அமருலகடைந்தான்.
சாந்தி, சாந்தி, சாந்தி

இராஜகந்த பத்மநாத சிவாச்சாரியார்

ஆதி கோணேஸ்வரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரங்கற்பா

ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்து நான்கு கல்முனையில்
அவதரித்த நல்மகனாய் நானிலத்தில் வாழ்ந்திருந்தீர்
பொன் இனிய சுதெந்திரனாய் பாண்டிருப்பு பதியினிலே
புகழ் பூத்த ஆத்ம ஜோதிசைவ சித்தாந்த சிரோன் மணியே

இருபத்து இரண்டு வருட காலம் ஈசன்மகன் முருகனையே
இதயத்தில் ஏற்றிவைத்து இறைதொண்டு செய்தவன் நீ
பண்பு நிறைக் குடும்பத்தை பாங்குடனே நடத்திவிட்டு
பாருலகை விட்டு பிரிந்தது விதியின் பயன் இதுவோ

நட்பிற்கு இலக்கணமாய் என் இதயம் குடிபுகுந்து
நல்ல பல கருத்துக்களை என்னுடன் பகிர்ந்வனே
நாமம் பண்புள்ள நல்மகனாய் நீ வாழ்ந்து
நடு வயதில் எமை விட்டு இறைவனடி சேர்ந்தனையே

இறை தொண்டே வாழ்நாளில் சுபதொண்டனாய் நீ நினைத்து
இத்தரையில் ஆன்மீகம் செழிப்பதற்கு வழிவகுத்தாய்
குன்றிருக்கும் இடமெல்லாம் குமரன் இருப்பதுபோல்
குவலயத்தில் உனது நாமம் ஓங்கி நிலைத்திருக்கும்

உமது ஆத்ம சாந்திக்காக
பிராத்திக்கும் உற்ற நண்பர்
கிரியா கலாநிதி
சாதக நாத சாகரம்
சிவஸ்ரீ கணேச லோகநாதக் குருக்கள்
பிரதம குரு
சிவனேஸ்வரர் ஆலயம்
ஆரையம்பதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புத் தெய்வத்திற்கு கண்ணீர் காணிக்கை

அன்பின் இலக்கணமாய்
அகிலத்தில் வந்துதித்த ஆரியாஷானே
அறத்தின் வடிவாய் அரவணைப்பில் அன்னையே
அனுதினம் ஆண்டவனை ஆராதித்த அன்பனே!
ஆன்மீகத்தின் சாரமே ஆகமத்தின் வழியே
ஆயுள் முடியும் நேரத்தை அறிந்து சுறிய - தீர்க்கதரிசியே
ஆதரிப்பதில் நீங்களே! வள்ளல்.

இறுதி மூச்சு வரை எங்களை இன்னல்களின்றி
வாழவைத்த தெய்வமே
இறைபணிக்காய் இடரினை முகங்கொண்டீர்கள்
இடையினிலே எங்களை பரிதவிட்டு
சென்றதன் காரணம் என்னவோ தந்தையே?

நல்லாசானாய், நற்பதியாய், நற்குருவாய் நாவல்லோனாய்
நற் தந்தையாய் நாமகளின் புத்திரனாய்
நானிலத்தில் இருந்த எம் தந்தையின்
நலனுக்கு இணை ஏதும் இல்லை - இப்பாரினில்
பாண்டியூர் பரணி எனும் புனை பெயர் கொண்டு
பல்துறைக் கலைஞனாய் பரிணமித்தீர்கள்
பலரின் நலனுக்காய் அயராது உழைத்தீர்கள்
பல பாராட்டுக்களையும் பெற்றீர்கள் - தந்தையே

இனி எப்போது நின்முகங் காண்பேன்
இனி யாரிடம் நின் அறிவுரை கேட்பேன்
தாங்கொனாத் துயரில் எமை ஆழ்த்தி
தத்தளிக்க சென்று விட்டீர்கள் - அப்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசத்தோடும் பரிவோடும் எமை வளர்த்து
பாடம் சொல்லி பள்ளி அனுப்பிய
நாட்களை நினைக்கையிலே
கண்ணீர் பொங்குகிறது - அப்பாவே

நேசமுடன் உணவூட்டி உறங்கவைக்கும் போது
நெகிழ்வுடன் நீங்கள் பாடும் பாடல் இன்னமும்
காதில் ஒலித்துக் கொண்டிருப்பதை உணர்கின்றேன்.

தங்கள் கடமையை உரியவாறு செய்து
உதாரண புருஷனாய் வாழ்ந்து எமைப் பிரிந்து
உமைபதி பதம் அடைந்த எம்
தன்னிகர் இல்லாத் தந்தையின்
ஆத்மா சாந்தி பெற உமையாள்
பங்கனை கண்ணீர் மல்க
கசிந்து வேண்டுகின்றேன்.

ஓம் சாந்தி... சாந்தி... சாந்தி...

அன்பு மகள்
சுஜாழினி சஞ்ஜீவ சர்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யஷா மகளின் அழுகைக் குமுறல்

பாலர் பருவம் முதல் பட்டம் வரை
பாங்குடன் பயில்வதற்கு பக்க பலமாக
இருந்து விட்டு பதவி கிடைக்கும் முன்பே
பரிதவிக்க விட்டுச் சென்றீரே அப்பா...

சாஸ்திர நுட்பங்களை மிகச்
சாதாரணமாக சரளமாக கற்றுத் தந்த
ஆசானே - தன் திறமையின் வரலாறு
பறை சாற்ற வார்த்தை ஏதுமில்லை அப்பா...

தாய்க்குத் தலைமகள் இல்லை என்றாலும்
தலை மகன் என்றே கூறினீரே தவிக்க விட்டு
சரணாகதி அடைந்து விட்டீர் அப்பா...

உங்கள் தாயின் சாயல் என்றீர்கள்
என்னை காண்பவர் தங்களின் சாயல் நான் என்றார்கள்
தாய் இருக்க சேய் தகனமானது ஏனோ அப்பா...

என்கடன் பணி செய்து கிடப்பதே
என்று வாழ்ந்தேன் ஐயா - கடன் செய்ய
இயலாதவளாக ஆகி விட்டேன் - ஆனால்
திங்களோ கடமை முடிந்து விட்டீர்
எனச் சென்றீர்ளோ...

அழைத்தது செவியில் கூட விழவில்லையே அப்பா
அதுவே இறுதி அழைப்பாக மாறும் என்று
கனவில் கூட நினைக்கவில்லை அப்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயலாத நிலையில் கூட தன் சேமிப்பினை
எனது கல்விக்காகத் தாரை வார்த்தீர்கள் - அப்பா
வீரத்தின் சுலை மகனாய்
விடா முயற்சியின் சிகரமாய்

தர்மத்தின் வழிகாட்டியாய் திறமையில்
குருவாய், தெய்வத்துள் தெய்வமாய்
நிறைந்து விட்டீர் அப்பா - பஞ்ச பூதங்களுடன்
கலந்து விட்டாலும் பாசமிகுதியால்
பக்கத்தில் காவலாகவே இருப்பீர்கள் அப்பா...

தூக்கிச் சாத்த ஆண்பிள்ளை இல்லை என்றாலும்
துணையாக நான் இருக்கிறேன் என்றீர்களே
நானே போதும் என்ற வார்த்தை இப்போதும்
நாதமாக ஒலித்துக் கொண்டிருக்கின்றது.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்வான்
வானுறையில் தெய்வத்துள் வைக்கப்படும்"

அன்பு மகள்
யஷாந்தினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடைக்குட்டி மகளின் கண்ணீர் வரிகள்
## தந்தைக்கு நிகரில்லை இவ்வுலகில்

பாண்டவர் பூமியென பாஞ்சாலி தேரேறும் பாண்டியூரில்
பரமனின் மகன் குமரனுக்காய் தன் வாழ்நாள் முழுவதும்
வாடிப் பணி செய்து எம்மை வாழ்வித்த என் தந்தையே
எம்மிடம் சொல்லாமல் சென்றது ஏனோ? அப்பா

இறைவன் பணிக்காய் உம்மை அர்ப்பணித்தீர்
ஈகை என்னும் ஈடு செய்தீர்
இல்லறத்தை இடைவிடாது இயக்கினீர்
இறுதியில் ஈசனிடம் செல்வதற்கு எம்மை விட்டீர் தந்தையே

சோதனைகள் பல கண்டாலும்
சாதனைகள் பல பெற்று எம் உள்ளத்தில்
சாகா வரம் பெற்றீர் எம் தந்தையே
எவ்வறுமை வந்த போதும் உம் பிள்ளைகளை
காத்து ஊக்கமும் உற்சாகமும் தந்தீர் அப்பா

தன் பசியை தாங்கி எம் பசிக்கு பாடுபட்டீர்
உம் பிள்ளைகள் உயர் பதவி பெறும்
உதய காலமதில் ஒரு நொடியில்
எம்மை விட்டு பிரிந்தீரோ எம் தந்தையே

கடைக்குட்டி மகளுக்கு கன்னத்தில் முத்தமிட்டு
கடைசி நாள் பசியென்று என் கரத்தால்
உபசரிப்பை பெற்றது
கடைசியாக கேட்டீர் என்பதை உணராத
பாவியாகி விட்டேனப்பா பதறுகிறது என் மனம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமை தேடி வந்தோரை அன்பாக அரவணைத்து
உமக்கு இல்லாவிடினும் ஏனையோரை
உபசரிக்கும் உத்தமரே!
உம் பிள்ளைகளை நல்ல நிலைக்கு உயர்த்திட்டீர்
ஆனால் - உம்மை நல்ல நிலையில் வைத்து
இரசிப்பதற்கு சந்தர்ப்பம் தராமல் தவிக்க விட்டீரே
எம் மனக் குமுறலை யார் அறிவார் உம்மைத் தவிர
எம் பாசமிகு தந்தையே

அன்பாகவும் ஆதரவாகவும் நல் ஆசானாகவும்
அன்பு கலந்த ஒழுக்கம், அறிவுரைகள் வழங்கிய என்
உயிர் அப்பாவின் ஆசிகளை எங்கு கேட்பேனோ
தெரியவில்லை அப்பா கதறி அழுகிறது என் மனம்...

நம் இருவருக்கும் ஒரே தினத்தில் பிறப்பை தந்த
இறைவன் இறப்பில் எனை மட்டும் தனித்து
தவறிழைத்த இறைவனை என்ன சொல்வதப்பா...

கனிவுள்ள வார்த்தை பேசி கலங்கா உள்ளம் கொண்டு
உம் கனவை எம் கனவாக்கி உதிரத்தை தந்து
எம்மை உயர்த்தி என் தந்தையே
உனை விட்டால் யாரிருக்கார் எமக்கு
ஒரு பதில் சொல்வதற்கு தந்தையே

காலம் கனிந்து வர என் கல்வி முடிந்து வர காத்திருந்தும்
பதவி பெறும் முன்பே பரமனிடம் செல்வதற்கு
பதில் ஒன்றும் கூறாமல் எம்மை பதற வைத்த
காரணம் என்னவோ அப்பா...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளமாக உனைப் போன்று வாழ்வு தந்தீர்
வாசம் நுகருமுன் வானுலகம் சென்றீர்
நீங்கள் இன்றி ஒரு மகிழ்ச்சி இனி வேணாமப்பா
நிச்சயமாய் என்றும் எம்மோடு தெய்வமாய் வாழ்ந்திடுவீர்

மரணத்தின் பிடியில் இருந்து மாறுபட்டு வந்த போது
மறு பிறப்பெய எம்பணி செய்தோம்
ஆண் பிள்ளை என்ற குறை வராமல்
அன்பாக உமைக் காத்தோம். ஆனால்
பொறுக்கவில்லையே அந்த இறைவனுக்கு
பொறுமையாக அழைத்துச் சென்றார் எமை விட்டு

கடவுள் பணியை தொடர புறப்பட்டீரோ அப்பா - எமை
கடமை செய்ய முடியாமல் கதற விட்டு
காத்திருப்போம் காலம் வரும் வரை உம்
கடமைகளை முடிப்பதற்கு....

"தந்தை மகற்காற்றும் உதவி அவையத்து
முந்தியிருக்கச் செயல்"

அன்பு மகள்
சு.தனுஷாலினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதயாஞ்சலி

மரணம் கொடியது ஐயா
அதனால் தான்
பிரிந்து நிற்கின்றோம்
உங்களை தங்கள்
குடும்பத்தில் இணைத்ததால்
நாங்களும் உங்கள் பகுழந்தைகள்
என்ற உணர்வு உங்களக்கு
அதனால் தான்
பிள்ளைகளையும்
எங்களையும் - உங்களால்
நேசிக்க முடிந்தது
உங்கள் மரணத்தை
எப்படி நம்புவது?
ஆனாலும்
கறுத்தக் கொடியும்
கண்ணீர் அஞ்சலியும்
நம்பித்தான்
ஆக வேண்டுமென்று
வற்புறுத்துகின்றன.
தாங்கள் இல்லாத வெறுமை
நிறையவே தெரிகின்றது. இருப்பினும்
பொன்மனச் சிரிப்புடன்
புகழ் பூத்து மறைந்த
தங்கள் தாழ்களில் மனம் குழைந்த
எம் மானசீக அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

அன்பு மருமகன்
பிரம்ஸ்ரீ இராஜகந்தயோ சஞ்ஜீவ சர்மா

"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமகனின் கண்ணீர் துளிகள் சில....

வையகத்தில் வானுயர் பெற்ற மாதவத்தோன்

என் ஐயாவை பற்றி சொல்வதற்கு இத்தாள் போதாது, எனினும் மனதில் இருக்கும் அவருடைய நீங்காத நினைவுகளை மீட்டி கண்ணீர் துளிகளால் சிலவற்றை சிந்துகின்றேன்.

முதல் முதலில் 2004 ல் சேனைக்குடியிருப்பு பத்திரகாளியம்மன் ஆலய கும்பாபிஷேகம் இடம்பெற்றதை பார்வையிட வந்த போதும் 2005 ல் சுனாமி நிவாரண பொருட்களை குருமார்களுக்கு ஐயாவின் தலைமையில் மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் பெற்ற போதும் கண்டேன்.

சில ஆண்டுகளுக்குப் பிறகு 2010 ல் பாண்டிருப்பு பிரதான வீதியில் நேரில் கண்ட போதிலும், விஸ்ணு கோயில் தீபங்களை என்னுடைய கோயிலுக்கு கேட்டுக் கொண்ட போதிலும் ஐயா அன்பாக பேசி என்னை உபசரித்து ஐயாவோடு இருந்த நட்பு பெரிதாகியது. தனது வீட்டில் தவறி விழுந்து உடல் நிலை முடியாததன் காரணமாக முருகன் ஆலயத்தில் 20 நாட்களுக்கு மேலாக பூசை செய்யும் பணி எனக்கு கிடைத்தது. அதிலிருந்து என்மீது பெருமதிப்பு வைத்து என்னுடன் இன்புற்று நடந்தார். சுகயீனம் வந்து வைத்தியர் பரிசீலிக்கும் போது அதனை தாங்க முடியாது என்னை பிடித்து விம்மி அழுதார். அப்போது நான் நினைத்தேன் இவர் குழந்தை மனம் உள்ளவர் என்று. அத்துடன் என்னுடைய ஆலயத்திற்கு வந்து பூசைகள் மற்றும் பிரசங்கங்கள் செய்து ஆலயத்தை சிறப்புறச் செய்தார். ஐயாவின் மனைவி மற்றும் பிள்ளைகள் நன்றாக என்னை உபசரித்து அன்பு காட்டினார்கள். அதுமட்டுமல்லாது தனது இல்லத்திற்கு யார் வந்தாலும் உபசரிக்கும் உயர்ந்த பண்பினை ஐயாவிடம் கண்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2013 ல் இளைய மகளை விரும்பி பயத்துடன் ஐயாவிடம் கூறினேன். அதற்கு "நல்லம்" பிள்ளையின் படிப்பு முடிய பார்ப்போம் எனக் கூறினார். அன்றிலிருந்து ஐயாவின் மீது மரியாதை நிறைந்தன. 2014 ல் எங்கள் இருவீட்டார் சம்மதத்துடன் தன்னுடைய இளைய மகளான தனுசாலினியை பேசி வைத்தார். அதிலிருந்து மாமா என்ற உறவைத் தந்தார்.

2015 ல் தான் புரிந்த பாண்டிருப்பு முருகன் ஆலய கும்பாபிஷேகத்தினை தலைமை தாங்கி பிரதீஷ்டா குருவாக நடாத்தி வைத்தார். அதில் நானும் ஏனைய குருமார்களும் கலந்து கொண்டோம். இங்கு மட்டுமல்லாது மலையகப் பிரதேசத்திலும் (நானு ஓயா, உளு கங்கை) போன்ற பல இடங்களிலும் கும்பாபிஷேகம் திருவிழாக்களை செய்தார்.

2016 ல் முருகன் ஆலய முதலாவது அலங்கார உற்சவத்தில் வேட்டைத் திருவிழா, மாம்பழத் திருவிழா போன்றவற்றை சிறப்புற மக்கள் பேசும் அளவிற்கு தன் திறமையைக் காட்டினார். இக்கால கட்டத்தில் 4ம் கிராமம் கண்ணகியம்மன் ஆலயத்தின் வைகாசி குளிர்த்தி சடங்கினை நடாத்தி வைத்தார். அவருக்கு உதவிப் பூசகராக பணிசெய்யும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

2017 ல் சிவன் ஆலயத்தில் பிரதம குருவாக கடமையாற்றி அவ்வருடம் திருவிழா, சங்காபிஷேகம் என்பவற்றை சிறப்பாக நடாத்தினார். அதில் என் பணியும் தொடர்ந்தது. அவ் வருடமே வந்தது ஐயாவிற்கு காலனாக தனது காலில் தீயிட்ட காயத்தினால் சில காலம் சத்திர சிகிச்சை பெற்று குணமாகி வீடு வந்தார். அவரின் பணிக்காக 2017.06.08 ஐயாவின் விருப்பத்திற்கு இணங்க ஐயாவின் இல்லத்தில் மகன் இல்லையென்ற குறையைப் போக்கி மகனாக அன்றிலிருந்து இன்றுவரை என் பணியை செய்தேன். அவரும் என்மீது பாசத்தினை பதித்தார். நான் என் குருவிற்கு செய்யும் பணியென மகிழ்ந்து செய்யத் தொடங்கினேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2019.02.06 ல் ஐயாவிற்கு திடீர் சுகயீனம் காரணமாக வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு ஊண், உணர்ச்சி அற்றவராக காணப்பட்டார். நான் மற்றும் ஐயாவின் குடும்பத்தினர் என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்து நின்றோம். பின்புதான் மனித வினைகள் என்று தெரியப்பட்டு பரிகாரங்கள் செய்து உலகில் உள்ள எல்லா தெய்வங்கிடத்திலும் அழுது கதறி கண்ணீர் விட்டு வழிபாடு செய்தோம். அதன் பிறகு ஐயா குணமாகி வீடு வந்தார். ஒன்றரை மாத காலங்கள் வீட்டில் வைத்து நல்ல பணி செய்தோம். அவரும் எங்களோடும், வருபவர்களுடனும் நன்றாகப் பேசி, உபசரித்து மகிழ்ந்திருந்தார். அப்போது வந்தது அந்த நாள்! அந்த நாள்தனில் அதிகாலை வேளைதனில் சிவனுமைதனைக்கண்டு, தீட்சை மந்த்திரம் அக்கணம் சொல்லியவுடன் சென்றது ஐயாவின் ஆத்மா....

சமஸ்கிருதத்திலும், மலையாளத்திலும், சோதிடத்திலும், சித்த மருத்துவத்திலும், கலைத்துறைகளிலும் பல ஆற்றலும் திறமையும் கொண்டு மக்களின் மனதில் என்றும் இடம்பிடித்த என் மாமா, "மானசீக குரு, நண்பர், புத்தி கூறும் புலவர்" என என் மனதில் நீங்காத இடம் பிடித்து என்னுடன் இருப்பேன் என்று என்னை விட்டுச் சென்ற "ஆத்ம ஜோதி சிவஸ்ரீ பொன். சுதந்திரன் குருக்கள்" அவர்களின் ஆத்மா என்றென்றும் திரு நீலகண்டனின் நிழலில் இருந்து முக்தியின்பம் பெற பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பார் போற்றும் பத்தினிக்கு பக்திமிகு பூசைதனை புரிவதற்கு
பார்தனில் வந்துதித்து பண்பாகவே பேசி பல் திறமைதனைக் காட்டி
பாரிலுள்ளோர் உள்ளமதில் பாங்குடன் இடம் பிடித்து
பரமனின் பாதத்தில் சென்று விட்டீரோ...."

தேவி தன் சேவையை செவ்வனே செய்யவென்று
தேசமெல்லாம் சென்று தன் சொல்லாற்றால் சிறப்பித்து
சோதி வடிவானவனை சொல்லி துதித்து
சோர்வில்லாது என்மை விட்டு பிரிந்து
சொர்க்கத்தின் வாசல்தனை வென்று விட்டீரோ

எங்கு சென்றாலும் என்னுடன் வருவேனென்று
என்னிடத்தில் அளவற்ற பாசத்தினை பதித்து
பக்தி மிகு வேதம் தனை புகட்டி
பாரில் இன்னும் சிலகாலம் வாழாது
என்னிடத்தில் சொல்லாமல் செல்வதற்கு
ஈசனின் மனது கல்லாகி விட்டதோ எம் ஐயாவை
கவர்ந்து செல்வதற்கு....

வானுலகம் சென்றாலும் எம் மண்ணில் நீங்கள் செய்த
பணி எம் மனதில் என்றும் நீங்காது வைகாசி திங்கள்தனில்
இவ் வையகத்தை விட்டு வைகுந்தப் பதி தேடிச்
செல்வதற்கு மந்திரம் தனை யோதி மௌனமாய் எம்மை
விட்டுப் பிரிந்தீரோ....

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

இவ்வண்ணம்
அன்பு மருமகன்
சிவஸ்ரீ. வசந்த டிமலேஸ்வரன் ஐயா
சேனைக்குடியிருப்பு - 01.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை இருளில் இரந்து ஞானத்தை கொடுத்து ஒளி தந்த அன்பிற்கு பாத்திரமான எனது குருநாதராகிய சிவஸ்ரீ. பொன்.சுதந்திரன் குருக்கள் ஐயாவின் சிவபதம் எய்திய பிரிவினையில் மூழ்கித் தவிக்கும் தங்கள் குடும்பத்தார் அனைவருக்கும் என்ன ஆறுதல் கூறி ஆற்றுவேன் எனத் தெரியாத நிலையில் எழுதும் சாந்தி மடல்.

மேற்படி செய்தியை கேட்டவுடன் மிகவும் துயருற்று கண்கலங்கி நின்றேன். வாழ்க்கையில் ஒரு மாணவனுக்கு சிறந்த குரு அமைவது அரிதான விடயமாகும். இருந்தும் எனக்கு இந்த குருநாதர் கிடைத்தது மிகப் பெரிய பாக்கியமாகத்தான் நினைக்கின்றேன். காரணம் என்னை ஒரு மாணவன் போல் அவர் ஒரு போதும் நினைக்காமல் தன் மகனை பார்ப்பது போல் என்னை உயர்கல்வியில் கற்கின்ற காலம் தொட்டு இன்றுவரை குறிப்பாக 16 வருடங்களாக குருவுக்கு குருவாகவும், தந்தைக்கு தந்தையாகவும் எந்தவொரு குறைகளும் இன்றி வேத சாஸ்திர இதிகாச புராணங்களையும் கற்றுத் தந்து என்னை மட்டுமல்லாமல் என்னைப் போல் பல மாணவர்களின் இறை குருத்துவப் பணியில் அனைவரையும் உயர் நிலைக்கு கொண்டுவந்த என்னுடைய குருநாதர் மறைந்ததை நினைத்து தாங்களும் தங்கள் குடும்பத்தில் இருக்கின்ற உற்றார் உறவினர்களுக்கும் இத்துயரினை தாங்க மனோதிடத்தை அளிக்க இறைவனை பிராத்திப்பதோடு என்னுடைய குருநாதரின் ஆத்ம சாந்திக்காக செய்யும் கிரியைகள் மூலம் இறைவனடியில் இருந்து தங்கள் குடும்பத்திற்கு நல்ல வழிகாட்டி அருள் பாலிப்பதாக என்றும் நம்புகின்றேன்.

குருநாதர் ஆத்ம சாத்தி அடைந்து எல்லோரும் மன அமைதி பெற எல்லாம் வல்ல காசி விஸ்வநாத சுவாமியை பிராத்திக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவே சிவமெனக் கூறினான் நந்தி
குருவே சிவமென் பதுகுறித் தோரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே யுரையுனர் பெற்றதோர் கோவே

விழி கிடைக்குமா அபயகரம் கிடைக்குமா
குருநாதர் சரணத்தில் நிழல் கிடைக்குமா
கோடி ஜென்மம் நான் எடுப்பேன் குரு
உந்தன் அருள் இருந்தாள்
உனக்கென்றே உனக்காக என்னை ஆக்குவேன்.
நினைக்காத துன்பம் பல எனை வந்து சேரும் போது
உனை நினைத்தாலே அபயம் தரும் கரம் கிடைக்குமா
ஓம் நமசிவாய

இ.ராஜேந்திர சர்மா
கி.கனேஸ்வர சர்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனிதருள் மாணிக்கம் சிவஸ்ரீ பொன் சுதந்திரன் ஐயா...

ஆண்டுகள் பல சென்றாலும் மாறாது நெஞ்சினில் நிலைத்து நிற்கும் ஐயா உங்களின் நினைவுகள். பாண்டவர் பூமியாம் பாண்டிருப்பு இருந்த நம் இருவரையும் இணைத்தது தாதிய சேவை என நான் நினைக்கிறேன். 2005 ல் முதன்முதலில் நான் சுதந்திரன் குருக்கள் ஐயாவை விடுதி இல: 01ல் தலையில் சிறு காயத்திற்கு மருந்து கட்டுவதற்காக வந்திருந்த போது சந்தித்தேன். நெடுங்காலம் நன்றாகப் பழகிய மனிதர்போல் மிகவும் அந்நியோன்யமாகவும் அன்பாகவும் பேசினார். அவருடைய பேச்சில் ஆன்மீகம், மற்றும் சித்த வைத்திய ஆர்வப் பண்புகள் பொதிந்து கிடந்ததைக் கேட்டு அக்கணப் பொழுதில் அவர்பால் ஈர்க்கப்பட்டேன். அவ்வுயர்ந்த பண்புகளே எங்கள் இருவரினதும் நல்லுறவிற்குப் பாலமாக அமைந்தன. அதுமட்டுமல்லாது ஐயாவின் நெருக்கம் என்னையும் அறிவுமட்டத்தில் உயர்வு கொள்ளச் செய்தது. அவரின் உயர்வான சிந்தனைகளிலும், சகல துறைசார் அறிவிலும் பல்லாளுமை கொண்டவராக அதாவது இசை, நாடகம், சாத்திரக்கலை, ஆன்மீகம், சிற்பக்கலை மற்றும் சித்தவைத்தியம் எனத் தொடர்ந்து கொண்டே சொல்லலாம். பல்வேறுபட்ட பரிமாணங்களைத் தன்னகத்தே புதைந்து வைத்திருக்கும் மிகப்பெரும் பொக்கிஷம் அவர்.

எப்போதும் ஆன்மீகப் பணியினை ஆழமான சிந்தனையாகக் கொண்ட அவர் முதன் முதலில் பாண்டிருப்பு முருகன் கோயில் கும்பாபிஷேகக் கனவை நனவாக்கினார். தன்னால் எதையும் சாதிக்க முடியும் என்ற அசைக்க முடியாத தன்னம்பிக்கையையும் விடாமுயற்சியையும் தன்னகத்தே கொண்ட ஓர் சாதனையாளர்.

நாங்கள் இரண்டு பேரும் நேரம் போவதே தெரியாமல் பல மணிநேரம் உரையாடுவோம். அவ்வேளையில் அவரின் வியத்தகு பல்லாளுமை ஆற்றலும் திறனும் என்னை மெய் சிலிர்க்க வைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழகப்பழக பாலும் புளிக்கும் . அதனால் ஐயாவுடன் நான் கொண்ட பழக்கமும் நெருக்கமும் தீட்டத்தீட்ட ஜொலிக்கும் வைரம் போல் பிரகாசமாகத் தொடரும். எனது பிள்ளைகளை அவரது விடாமுயற்சியினால் அயராது உழைப்பினாலும் அக்கரையோடு நல்லமுறையில் படிப்பித்துப் பயனடைந்து வெற்றி கண்டவர்.

சிவனைச் சனீஸ்வரன் பற்றிக் கொண்டது போல் ஐயாவையும் மனிதவினைகள் பற்றிக் கொண்டன. இதனால் சில மாதங்கள் கடுமையாக நோய்வாய்ப்பட்டு கல்முனை ஆதார வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்தார். ஆனாலும் அவர் செய்த தர்மம் தலை காத்ததன் பயனாக அதிலிருந்து விடுபட்டுக் குணமடைந்து வீட்டில் மனைவி மக்களோடு சந்தோசமாக இருக்கும் போதே அந்தத் துயரச் செய்தி 20.05.2019 அன்று அதிகாலை 12:45 மணியளவில் பேரிடி ஓசையாக என் காதுகளில் பாய்ந்தது. ஒரு கணமும் தாமதிக்காது விரைந்து ஓடோடி அவர் வீட்டை அடைந்த நான் அவருடைய இறைபதமடைந்த அந்த நிலையைக் கண்டு பேரதிர்ச்சியும் சொல்லொன்னாத் துயரத்தையும் தாங்க முடியாத மன வேதனையையும் அடைந்தேன். என் உள்ளம் அனலில் பட்ட புழுவாய்த் துடித்தது. ஓவென்று கதறி அழுதது.

அவுருடைய இந்த இழப்பு ஈடு செய்ய முடியவே முடியாதது. "நீத்தார் நீழ் உலகம் செல்வராயின் அவரின் நீங்கா நினைவுகளை நெடுவோலையாய் நாம் அடுக்கிடினும் அவர்தான் மீண்டும் வருவாரோ இப்பார் உலகில்"

பாவிமனம் ஏற்குதில்லையே! விம்முதே! விசும்புதே! மனைமக்கட் படுந்துயரம் யார் துடைப்பார்? யார் அறிவார்? அனைவருமே ஓரிருநாள் அவர் நினைவைப் பகிர்ந்து விட்டுப் போய் விடுவார். நெடுநாட்கள் உன் நினைவதனை நெஞ்சினிலே சுமந்தவராய் நெடுந்தூரம் கிடக்கிறதே! மனிதருள் மாணிக்கமே! ஆழ்கடலில் தேர்ந்தெடுத்த வென் முத்தே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயா! ஆண்டவனுக்குத் தொண்டு செய்து அவருக்கே அர்ப்பணமாகி அவருள் கலந்துவிட்ட எங்கள் ஐயாவே உங்கள் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி
'உன்பொன்னுடன் நீத்தாலும் புகழுடல் மங்காது'

திரு. க.சோழவேந்தன்
தாதிய உத்தியோகத்தர்.
சமாதான நீதவான்
ஆதார வைத்தியசாலை
கல்முனை-வடக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறை ஆசானுக்கோர் இதயஞ்சலி

புதுமையில் புலர்ந்த பொழுதொன்று
புவியில் வாழ்வு போதுமென்று
அஸ்த்தமித்தது.........................

சமூகத்தின் விடிவை நோக்கியதாய்
சதாகாலம் சுழன்று கொண்டிருந்த
சக்கரம் ஓய்வு பெற்றுக் கொண்டது

நிலையான இந்துவின் சனாதன தர்ம
நெறி நின்று வாழ்ந்தவொரு ஜீவன்
நெஞ்சமெல்லாம் மனித நேயத்தை
நிறைவாய் வைத்திருந்த ஜீவன்

அழகாய் மலர்ந்த நாமம்
"சுதந்திரன் குருக்கள்" என
அன்பாய் மக்களால்
அழைக்கப்பட்ட ஜீவன்

ஆச்சாரிய பட்டத்தினை சூடி
ஆண்டவனை நம்பி தூபமிட்ட - ஜீவனை
காலனவன் கைப்பிடித்து விட்டானே!
கலங்குகின்றோம் உறவுகளாய் நாங்கள்.

பதினேழு வருட மூத்தவனாய்
நானிருக்க
பதியினைச் சேர துடித்தாயோ
தம்பி
பரிதவிக்கின்றேன் உடன் அண்ணனாய்
நான் இன்று

பொன். ஏகாம்பரம் லை கொழுந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

"தெருநெல் உள்ளொருவன் இன்றில்லை என்னும் பெருமை உடைத்திவ்வுலகு"

ஆகிய பொய்யா மொழிப் புலவரின் திருக்குறற் பாக்களுக்கு அமைய இல்லற வாழ்வை நல்லற வாழ்வாக வாழ்ந்தவர்கள் சமூகத்தில் உயர்ந்த இடத்தில் வைத்துப் போற்றப்படுவதும் மக்கள் நினைவில் இருந்து போற்றிப் புகழப்படுவர். ஏனைய மனிதர்களுக்கு நல்ல முன்மாதிரிகளையும் சிறப்பான சேவைகளையும் விட்டுச் செல்பவரேயாவார். இத்தகையவர்களை மக்கள் மறந்து விடுவதுமில்லை நினைவு கூறாது விட்டு விடுவதுமில்லை நேற்று இருந்தவர் இன்று இல்லை எனும் பெருமையைக் கொண்டுள்ளது இந்த உலகம். ஆனால் அவர்கள் விட்டுச் சென்ற எச்சங்கள் அவர்களை எப்பொழுதும் நினைவூட்டிக் கொண்டேயிருக்கும். இதற்கேற்ப இந்த வாழ்க்கை காலத்துக்குள்ளே தான் தனது குடும்பம் மட்டும் என்றில்லாமல் ஆலய, ஆன்மீக சமூக பணிகளில் தன்னை இணைத்துக் கொண்டு இறைபணி செய்தவர் அமரர் சிவஸ்ரீ பொன். சுதந்திரக்குருக்கள் ஐயா என்றால் மிகையாகாது.

இவ்வுலகில் தாய் வயிற்றில் பிறந்த உயிர்கள் ஓர் நாளில் மரணத்தை எதிர் கொண்டேயாக வேண்டும் எனும் இந்து மத கோட்பாட்டிற்கேற்ப அமரர் சிவஸ்ரீ பொன். சுதந்திரக் குருக்கள் ஐயா அவர்கள் வாழும் சமூகத்திற்கு ஏற்றால் போல் வாழ்ந்து காட்டியவர் காலச் சவால்களுக்கு ஈடுகொடுத்து கருமமாற்றி வந்தவர். எதிர்ப்புகளுக்கு மத்தியில் எதிர்பார்ப்புக்களை நிறைவு செய்தவர். முகமூடிகளை அணிந்து செயற்பட்டவர் இல்லர். அவர் முடிமூடிகளை கிளித்தெறிய பாடுபட்டவர். அதனால் தான் அவர் பலரிடம் கிட்டே நில்லாது எட்டே நின்றவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் மூட்டிச் சென்ற அறியாமைக்கெதிரான அருளாளி உள்ளத்தை அள்ளும் உயிர்ப்புகளாகும் பூவாக இருந்து காம்பாக இளைத்து போன அவருக்கு இந்த சமுதாயம் ஒரு குருசேத்திரமாக அமைந்ததனால் வித்தைகளை பழகும் ஏகலைவர்களையும் இனங்காண விரும்பினார். அதனால் இந்த சமுதாயம் பெருவிரலை உடன் கேட்டதால் அவரில் பல வினாக்கள் எழுந்தன. கூருங்கக் கூறின் வாழும் போது வாழ்ந்த நாம் மறந்து விட்டோமே என்ற குற்றவுணர்வு என்றோ ஒரு நாள் நம்மை துயில் எழுப்பும் என்பதில் சந்தேகம் இல்லை.

என்னை பொறுத்தவரையில் அவர் எழுத்து வேதம், வார்த்தைகள் சட்டம், வாழ்க்கை சத்தியம், ஆகும். இறந்தும் இறவாத அந்த பெருந்தகையோடு கிட்டிய தொடர்பு இருந்ததால் அவரின் போக்குகள் எனக்குள்ளே கேள்வி எழுப்பும் தமிழையும் சமயத்தையும் நேசிக்கும் பண்புதான் அவர் செய்த இறைத் திருத்தொண்டாகும். அன்னாரது ஆறாத் துயரில் கலங்கி நிற்கும் மனைவி, மக்கள், உற்றார், உறவினர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கி.குணநாயகம்
மாவட்ட இந்து கலாச்சார உத்தியோகத்தர்
மாவட்ட செயலகம்,
மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னையாம் தெய்வானையின் அஞ்சலி

கல்முனை கடற்கரைக் கண்ணகை
கண்ணகை அம்மனின் முக வாசலிலே
குருத்து மணல் மீதினிலே
குட்டிக் காரிக்கன் வேட்டி மடித்துக்
கட்டிக் கொண்டு

பிஞ்சுக் கால்கள் பதித்து உறுண்டு
பிறண்டு விளையாடும் போதெல்லாம்
பெரியவனாகி உருத்துடைய பத்தினாச்சியின்
திருமகா தெய்வத்தின் ஒளி முகத்தவாகத்
திகழ்வாய் என்று நான்
தினையளவும் நினைத்ததில்லை கண்ணா...

தமிழ்த்தாய் போற்றி வளர்த்தெடுத்து
தாராளமாய் வழங்கிய சக்தியால்
அம்மனைக் குளிப்பாட்டிக் குளிர வைத்து
எழுந்தருளப் பண்ணி
அழகு படுத்தி அரியனையில் அமர்த்தி
அற்புதமான பூசைகள் புனற் காரங்களுடன்
ஆரத்தி எடுப்பாயென்று
அன்று நான் அறிந்திருக்கவில்லை கண்ணா...

சும்மாதான் கோயிலை சுற்றித் திரிகின்றாய்
சிரித்து மகிழ்ந்து பார்த்திருந்தேன்
இல்லவே இல்லை
குருவாய் வந்தெமது குல மானங் காக்கும்
நினைவு நெஞ்சத தெழவே நீ நடந்தாய்...
நெட்டுரம் பல கடந்தாய்...!
என்பதை நான் இன்றுதான் உணர்ந்தேன் கண்ணா...

அன்னை தெய்வானை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் பூசை நெறி முறைகளில்
உண்மையான பூரணத்துவத்தை
உணர்ந்த ஊர் மக்கள் மெச்ச அயல்
ஊர் மக்கள் மெச்ச அறிஞர் பெருமக்கள்
மெச்ச மேதினியில் வாழ்ந்தவனே

இதுதான் விதியதுவோ...
இளமையிலே நலம் மறந்தாய்
ஏங்கித் தவிக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விழி மல்க நினைவு கூறல்

நால்வராய் பிறந்தோம்
நற்பண்புடன் வளர்ந்தோம் - எம்
மூவருக்கும் முதல்வராய்
முக்கண்ணனிடம் செல்ல
முந்திவிட்டீரே!

அட்டகாசமாய் ஐயனாய் - இறை
அடியவனாய் நிமிர்ந்த நடையுடன்
நேர் பார்வையுடன் நின்ற - எம்
நெஞ்சம் மறவா உறவல்லவா நீ!

தம்பியாய் நீயிருந்து என்
தலைமகன் திருமணத்தை
தகனத்தின் முன் நின்று -
தடல்புடலாய் நடத்திய உன்
தகனமோ - எம்மைத்
தவிக்க வைத்துவிட்டது.

ஈசனைச் சரணடைவேனென்று - உன்
இல்லாளிடம் கூறியதும் - அக்கணமே
என் இரு கை உன் மூச்சை
வாங்கியதும் கண்ணைவிட்டு
அகலவில்லை உறவே!
தெய்வமாய் நின்று எம்மைக்
காத்தருள வேண்டும்

சகோதரிகள்
பாக்கியம், யோகேஸ்வரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாமாவுக்கோர் அஞ்சலி

என் குலம் போற்றும் ஆசானாய்
என் குடும்பத்தார்க்கு தெய்வமாய்
சான்றோர்க்கு சக உறவாய்
சகலர்க்கும் நண்பனாய்! நின்றவர்
நீங்கியதேன் எம்மை விட்டு
ஐம்பது நாட்களை குளிரறையில் கழித்து
கலங்கடித்த நீங்கள் - கடந்த
ஒன்றரை மாதத்தை உங்கள் மனைதனிலே
மனைவி, மக்கள், அக்கா, தங்கை, சக நண்பர்களின்
அரவணைப்பிலே ஆசுவாசப்பட்டு
மக்களுடன் உங்கள் தேனிய குரலால் - இறை புகழ்
மகிழ்ந்து பாடி - மரணத்தை வென்றவன் நான்
இனி எனக்குப் பயமில்லை என எங்கள் மனங்களில்
மருந்திட்டு மகிழ்ச்சியூட்டிய மாமனிதரே!
மறக்குமா? உங்கள் நினைவு மறையுமா உங்கள் புகழ்
மாறுமா! மாமாவே!

ஐயா! நீங்கள் எம்மைவிட்டப் பிரிந்தும்
நாம் மறையும் வரை எம் காலம் உதிரும் வரை
உங்கள் பெயருக்கு கடுகளவும் கலங்கம் வராமல்
காப்போம் உறவுகளாய் நின்று
பொன் சுதந்திரன் குருக்கள் எனும் பெயரை
எப்போதும் பதிவிடுவோம்.
உங்கள் பதினாறாம் நாளில் ஆத்மா சாந்தியடைய
வேண்டி நிற்கும் மக்களும் மருமக்களும்

குமாரதீபன் ருத்ரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னக்கா என்றழைக்கும்
சில்லென்ற குரல் ஓசை
என்னக்கா யோசனை
எல்லாமும் நல்லதுக்கே
என்று சொல்லும் என் தம்பி சுதந்திரா நீ எங்கு சென்றாய்?

பொன்னையா - காளிப்பிள்ளை
பொன்மகனாய்ப் பிறந்தாலும்
வள்ளிப்பிள்ளை தன்வளர்ப்பில்
வாஞ்சையுடன் வளர்ந்தாயே.

ஏகாம்பரம் சிவபாக்கியம்
இனிய தங்கை கொழுந்தினி
இவர்களுடன் நீ பிறந்தாலும்
சின்னக்கா பெற்ற பிள்ளை சுதந்திரன்
என்றுதானே பலரும் சொல்வார்கள்.

கருத்தாக உயர்கல்வி
கண்ணாக கற்றுவந்தாய் - இளமையிலும்
இறை சேவை செய்தாய்
கடவுள் அன்பால் ஈர்க்கப்பட்டாய்
கடவுளில் காதல் கொண்டாய்
கைதொழும் குருவும் ஆனாய்
கடவுள் உன்னில் அன்பு கொண்டார்
கணப்பொழுதில் அணைத்துக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பருக்கு நன்பராக
நல்லதொரு சோதரராய்
அன்பான இல்லாளுக்கு
அருமந்த துணைவனாக
மாமனாக மருமகனாக
வாழ்ந்து வந்த சுதந்திரா
வழியின்றி தவிக்கின்றோம்.
வழியான உனை இழந்து!

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

சின்னக்கா குடும்பம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்றும் என் நினைவில் நீங்காத ஐயா

1993ம் ஆண்டு எமது ஆலயத்திற்கு முதன் முதலாக வந்த நாள் வாவா அண்ணன் என்று நீங்கள் அழைத்த ஞாபங்களோடு உங்களுடனான எனது உறவு பற்றி...

உமது பாண்டிருப்பு ஸ்ரீசித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தில் முதன் முதலாக மருத்து நீர் வழங்கும் நிகழ்வை ஆரம்பித்து இன்று வரை அது சிறப்பாக நடைபெற அடிகோலியவர்.

முதன் முதலாக எமது ஆலயத்தில் ஸ்கந்தசஷ்டி விரதம் அனுஷ்டிக்கும் வழக்கத்தை ஏற்படுத்தி அது இன்று வரையும் சிறப்புற நடக்க ஆவணை செய்தவர்.

எம் பெருமானின் ஆலயத்திற்கான வரைபடத்தையும் வரைந்து அதற்கான அமைப்புகளையும் திட்டமிட்டு ஆலயத்திற்கு வரும் பக்தர்கள் அனைவரிடமும் எம்பெருமானுக்காக ஆலயம் கட்டவுள்ளதையும் அந்த திருப்பணிக்காக உதவிகளின் தேவைகளையும் எடுத்துச் சொல்லி பல உதவிகளையும் பெற்றுக் கொடுத்தவர்.

எம்பெருமானது மூலஸ்தானம் தவிர்ந்த ஏனைய ஆலயங்கள் அனைத்திற்கும் அடிக்கல் நட்டது முதல் கும்பாபிஷேகம் வரை செய்தவர். ஆலயத்தில் அமைந்துள்ள சமுர்த்தி கிணறு முதல் தீர்த்த கிணறு வரையும் இறுதியாக சண்டேஸ்வரர் ஆலயம் வரையும் அடிக்கல் வைத்து அதன் அனைத்து அமைப்பு பணிகளையும் கண்டவர்.

சூரன் போர், வேட்டைத் திருவிழா போன்றவற்றையும் கூட செய்து சூரனும் முருகனும் போர் செய்யும் காட்சியை கண்முன்னே காட்டிய சிறந்த கலைஞர் இவர்.

ஆலய நிர்வாகத்தோடும், என்னோடும், என் குடும்பத்தோடும், எம் சமூகத்தோடும், மக்களோடும் நல்லுறவு பேணியவர். அதே போன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரந்தர வருமானம் எதுவுமில்லாத எமது ஆலய நிருவாகத்தின் நிலை அறிந்து சம்பளம் என்பதை பெரிதாக எதிர்பார்க்காமல் எம்பெருமானுக்கும் எமது மக்களுக்கும் சிறப்பான சேவை செய்தார்.

நல்ல மத போதனைகளை பக்தர்களுக்கும் இளைஞர்களுக்கும் வழங்கி தற்போது கூட தலை நகர் மற்றும் பல இடங்களில் பெரிய பெரிய ஆலயங்களிலும் வெளிநாடுகளிலுள்ள ஆலயங்களிலும் குருக்களாக பலர் பணிபுரிய காரணமானவர்.

நல்ல கலைஞராகவும், எழுத்தாளராகவும், கவிஞராகவும், வைத்தியராகவும், சோதிடராகவும் திகழ்ந்து கலாபூசணம் விருதும் பெற்றவர்.

எம்பெருமான் மீது கொண்ட பக்தியினாலும் பற்றுதலினாலும் ஆலயத்தின் பணிகள் அனைத்தையும் தன் பணி என நினைத்து சிறப்பாக செய்தவர். எந்த ஒரு ஆலய குருவும் செய்யாத பணிகள் செய்தவர். இந்த பணிகளை தன் மனைவி, பிள்ளைகளைக் கூட செய்ய பழக்கினார். ஆலய அமைப்பு வேலைகள், கும்பாபிஷேக வேலைகளில், நீராகார உபசரிப்புகளைக்கூட தானும், தன் மனைவி, பிள்ளைகளுமாக இணைந்து செய்த சிறப்புக்குரியவர்.

சுனாமி வேளையில் பொது மக்கள் அனைவரும் ஊரைவிட்டே இடம் பெயர்ந்த போதும் எம்பெருமானது ஆலயத்திலேயே எங்கும் செல்லாமல் இருந்தவர்.

22 வருடங்களாக தொடர்ச்சியாக எம்பெருமானுக்காக எமது நிருவாகத்தோடும், எம் சமூக மக்களோடும் இணைந்து பணியாற்றியவர். எம்பெருமானது ஆலயத்திலேயே குருப்பட்டாபிஷேகமும் பெற்று, எம் பெருமானது கும்பாபிஷேகத்தையும் தன் தலைமையில் சிறப்பாக செய்து, முதலாவது திருவிழாவையும் சிறப்பாக செய்து எமது ஆலய நிருவாக மாற்றத்தோடு எம்பெருமான் பணிகளில் இருந்து விடை பெற்றவர். இன்று எம்மிடம் இருந்து விடை பெற்று விட்டவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் முருகா... ஓம் முருகா... என்று
ஓதிய குரல் ஒன்று ஓய்ந்ததுதானே

ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்தி நான்கு
பொன்னையா காளிப்பிள்ளை தம்பதிக்காய் வந்துதித்த வேலவனின் சேவகரே

ஆயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்றி மூன்றிலே
எம்பெருமானுக்கு சேவை செய்ய வந்தவரே

ஆயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்றி நான்கிலே
முதன் முதலாய் மருந்து நீர் வழங்கிப் பணி தொடர்ந்தவரே

ஆயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்றி எட்டிலே
குருப்பட்டாபிஷேகமும் பெற்று
சிவஸ்ரீ. பொன்.சுதந்திரன் குருக்கள் ஆனவரே

இரண்டாயிரத்து நான்கில் முதன் முதலாய் கந்தசஸ்டி விரதமும் அனுஷ்டிக்கச் செய்தவரே

ஆலய வரைபடமும் வரைந்து அதன்
அமைப்புகளையும் தொகுத்து அதற்காக உழைத்தவரே

பக்தரோடு பழகும் விதம் கொண்டு
ஆலய அறப்பணிக்காய் பல
உதவிகளைப் பெற்று பக்கபலம் சேர்த்தவரே

பூசை புனஸ்காரம் முதல்
ஆலயச் சுத்தம் சூழல் சுத்தம் பேணி
முருகன் பணிக்காய் தன் மனைவி பிள்ளைகளையும் இணைத்து
ஆலயம் காத்த காவலரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரண்டாவது மகளின் அரங்கேற்றத்தின் போது





மூத்த மகளின் திருமண நிகழ்வின் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கொஸ்லாந்தை



மொனராகலை முத்துமாரி அம்மன் ஆலயத்தின்
பிரதமகுருவாக பொறுப்பேற்ற போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**குரு பட்டாபிஷேக நிகழ்வின் போது**

**பாண்டிருப்பு ஸ்ரீ சித்திர வேலாயுத தேவஸ்தான சூரன் போர் நிகழ்வின் போது**









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாண்டிருப்பு ஸ்ரீ சித்திர வேலாயுதர் தேவஸ்தான குடமுழுக்கின் பிரதிஷ்டா பிரதம குருவாக கலந்து கொண்ட போது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குரு பட்டாபிஷேக விழா



குரு பட்டாபிஷேக கௌரவிக்கப்பட்ட நிகழ்வின் போது

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



கல்முனை ஆதார வைத்தியசாலை பிள்ளையார் ஆலய
கும்பாபிஷேக மலர் வெளியீட்டின் போது




பெரிய கல்லாறு மடத்தடி பிள்ளைார் ஆலய
சங்காபிஷேக நிகழ்வின் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தன் கை வண்ணத்தில்
சூரன் செய்த போது



4ம் கிராம முருகன் ஆலய
திருக் கல்யாண நிகழ்வின் போது







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூத்த மகளின் பட்டமளிப்பு விழாவின் போது



ஐயா தனது துணையுடன்



கடைசி மகளுடன் கோப்பாய் கல்வியற் கல்லூரியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத போதனைகள் பல செய்து
பல மத குருக்களை உருவாக்கிய சேவகரே

பல்துறைக் கலைஞனாக பன்முகம் காட்டியதோடு
வைத்தியம் சோதிடம் என
பல மக்கள் பணியும் செய்தவரே

சூரனும் முருகனும் போர் செய்யும் காட்சியை
கானச் செய்து சூரன் போர் சிறக்கச் செய்தவரே

வேட்டைத் திருவிழா செய்து
வேட்டையாடிக் காட்டியவரே

வேலன் பணிதான் தன் பணி என்று
வேதனம் இன்றியும் வாழ்ந்தவரே

தொடர்ந்து இருபத்தியிரண்டு வருடம்
எம்பெருமானுக்கு சிறப்பாய் சேவை செய்தவரே

ஆலய நிருவாகத்தோடும்
எம் சமூக மக்களோடும்
என்னோடும் என் குடும்பத்தோடும்
ஒன்றித்து உறவாய் வாழ்ந்தவரே

எம்பெருமானால் குருப்பட்டாபிசேகம் கண்டு
எம்பெருமானுக்காய் கும்பாபிசேகமும் கண்டு
முதலாம் திருவிழாவும் கண்டு
சிவஸ்ரீ பொன்.சுதன்திரன் குருக்கள் ஆக உயர்ந்து நின்றவரே

உம் சேவை இனி இப்பாரினில் போதும் என அழைத்துக் கொண்டானே
எம்பெருமான்

கன்னீரோடு வாவா அண்ணன்.
க.தாமோதரம் முன்னாள் தலைவர்
ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலய
பரிபாலன சபை - பாண்டிருப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணான நல்வாழ்வு காசினியில் வாழ்ந்துவிட்டு விண்ணுலகில் இறைபதம் திரும்பிய அண்ணல் (அமரர்) பொன் சுதந்திரன் அவர்களின் பொற்பாதத்திற்கு இக்கவி சமர்ப்பணம்.

மண்ணில் பிறந்தாய் மனிதனாய் வாழ்ந்தாய்
மற்றார்க்கு மனநிறைவாய் மகத்தான் பணிபுரிந்தாய்
எண்ணில்லாத் துன்பம் எத்தனைதான் வந்தாலும்
அத்தனையும் ஏற்று அமைதியாக வாழ்ந்தாய்
புண்ணாகி நெஞ்சம் புளுங்குது என்றாலும்
பூப்போல நினைத்து புன்னகை புரிந்த நீங்கள்
மண்ணுலகை விட்டு மறைந்தின்று போனாலும்
எண்ணத்தில் நீங்கள் எப்போதும் நிறைந்திருப்பீர்.

மனைவி, மக்களையும் மற்றுமுள்ள உறவான
அனைவரையும் தவிக்க விட்டு அமரபதம் அடைந்தாலும்
உனை நினைத்து என்றும் உள்ளத்தால் துதிப்பதற்கு
அனைவரும் நினைப்பார் ஆண்டவன் திருவடி சேர
உழைப்புக்கு ஏற்ற ஊதியம் என்பது போல்
களைக்காமல் செய்த கருணைப்பணிகளை நாம்
கடைசிவரை காணுமுன்னே காசினியை விட்டு
விடைபெற்றுச் சென்றுவிட்டீர் வித்தகனார் பதம் சேர

குஞ்சரன் ஆலயமும் குமரன் ஆலயமும்
நஞ்சுண்டார் ஆலயமும் நல்ல சக்தியாலயமும்
நெஞ்சினிக்கப் பூசை செய்தாய் நெகிழ்ந்து பக்தர் மனமுருக
நெஞ்சில் உரம் கொண்ட நேர்மையுள்ள மனிதனாய்
தஞ்சமென்று வந்தாய் தனக்கென்று வையாமல்
கொஞ்சமேனும் ஈந்து கொடுப்பாய்புன் நகையுடன்
வஞ்சமில்லா மனிதனாய் வாழ்ந்து விட்டுப் போனாலும்
நெஞ்சில் இடம் கொண்டவரே நினைப்போம் உனைத்தினமும்.

கவிஞர் வைரமுத்து கணேசன்
பிள்ளையார் கோயில் வீதி
சேனைக்குடியிருப்பு - 01.
கல்முனை
0776622749

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“வையத்துள் வாழ்வாங்கு வாழ்வான்வானுறையும் தெய்வத்துள் வைக்கப்டும்” என்ற தெய்வப் புலவரின் வாக்கிற்கமைய வாழ்ந்து அமரத்துவமடைந்த ஒரு பெரு மனிதராக நான் அவரை காண்கின்றேன்.

இறைபணியில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து நிறைவாக தனது முழுக் குருத்துவத்தையும் நிறைவு செய்து குருத்துவப்பணியுடன் சமூகப்பணிகளையும் சோதிடம் மற்றும் மருத்துவப் பணிகளையும் செய்து மக்களின் மனம் விட்டகலாத ஒருவராக இருந்த பெருமைக்குரியவராக இருந்தவர் என்பதை சகலரும் அறிந்தவிடயம்.

தனது வாழ்க்கையில் பல மறக்கமுடியாத துன்பங்கள் வந்தபோதும் துவளாது இறைநம்பிக்கையோடு பொறுமையான மனத்துடன் பல இளைய தலைமுறையினரை தன்னோடு அரவணைத்து குருத்துவப் பணிகளைக் கற்பித்து தங்களின் சிறந்த மாணவர்களாக பல ஆலயங்களில் பணியாற்றுவதைக் கண்டு மனம் நிறைவு கொள்கிறது.

அதுமட்டுமன்றி தான் விட்டுச் சென்ற பணியைத் தொடர தனது பிள்ளைகளின் வாழ்க்கைத் துணையாக குருத்துவப் பணிகள் செய்கின்ற குருமார்களைப் பெற்றதும் தாங்களின் பணிக்கு இறைவனால் கொடுக்கப்பட்ட பெரும் பேறாகும்.

பூரணப்படுத்தப்படாத பல ஆலயங்களில் பணி செய்த காலங்களில் அவ்வாலயங்களின் குடமுழுக்கு வைபவங்கள் சிறப்பாக நடைபெறுவதாக நிர்வாகத்தினருடன் இணைந்து பணியாற்றியதை என்றுமே மறக்க முடியாது.

பாண்டிருப்பு மகாவிஷ்னு ஆலயத்தில் பல வருடகாலம் பணியாற்றி ஆலயவளர்ச்சிக்கு பெரும் பங்காற்றிய ஒரு குருக்கள் ஐயாவாக இருந்த மதிப்பிற்குரியவராக விளங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது கடந்தகால நினைவுகளை மீட்டவனாக அமரத்துவமடைந்த பொன் சுதந்திரன் குருக்கள் ஐயா அவர்களின் மனைவி பிள்ளைகள், மருமக்கள் அனைவரிற்கும் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

சாமஸ்ரீ தேசமான்ய யு.செல்லத்துரை J.P.
முன்னாள் தலைவர் பாண்டிருப்பு
மகாவிஷ்ணு ஆலய பரிபாலன சபை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐயாவைப் பற்றிய பதிவுகள்

ஆத்மஜோதி சிவஸ்ரீ பொன் சுதந்திரன் குருக்கள் ஐயா அவர்கள் ஒரு மென்போக்குடைய ஆளுமைமிக்கவர். வார்த்தைகளில் வேகமும் உற்சாகமும் காட்டி மக்களை தன்வழிப்படுத்துவதில் முன்நின்று உழைத்த ஒரு பெருமகனாக திகழ்ந்தவர். நாங்கள் அவரோடு பழகும் போதெல்லாம் மிகவும் இனிமையாகவும் எக்காரியத்தை முடிப்பதற்காக அவரை நாடினோமோ அதனை மிகவும் இலகுவாக அடைவதற்கு உரிய மார்க்கங்களை கூறி எங்களோடு சேர்ந்து தன்னாலான அனைத்து உதவிகளையும் புரிந்து அக்காரியம் நிறைவடைய உதவுபவர்.

(உதாரணம்) அவரது ஆக்கத்தின் மூலம் எங்கள் ஆலயத்திற்கு ஒரு சூரன் சிலையினையும் உருவாக்கித் தந்துள்ளார். அது மாத்திரமல்ல எங்கள் ஆலயத்திற்கு பலவாறான உதவி ஒத்தாசைகளையும் புரிந்துள்ளார்.

அன்னாரை இழந்து துயருறும் மனைவி, மக்களும் உற்றார் உறினர்களுக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எம் பெருமானை பிரார்த்தித்துக் கொள்கின்றோம்.

இவ்வண்ணம்
4 ஆம் கிராமம் குருக்கள்
ஆலய பரிபாலன சபையினரும்
கிராம மக்களும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதோஷ விரதமகிமை

சில விரதங்களுள் பிரதோஷ விரதமும் மிகச் சிறப்பு உடையது. மாதம் இருமுறை வர்பிறை தேய்பிறை ஆகிய இரண்டு காலங்களிலும் வரும் திரயோதசித்தியில் சூரியன் மறைவதற்கு முன்னுள்ள மூன்றே முக்கால் நாழிகையிலிருந்து சூரியன் மறைந்தபின் மூன்றே முக்கால் நாழிகை காலமே பிரதோச காலமாகும். (மாலை 4.30 மணி முதல் 7.30 மணிவரை)

கந்த புராணத்தில் இவ்விரதத்தின் சிறப்புக்கள் பற்றி சொல்லப்பட்டிருக்கின்றன. சிவதரமோத்திரம். சிவரகசியம் ஆகிய நூல்களிலும் இவ்விரதம் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

"பிரதோஷம்" என்றால் இராத்திரியின் முகம் என்று பொருளாகும். வடமொழியில் இதனை "ரஜனழ முகம்" என்று சொல்வார்கள்.

அமாவாசை, பூரணைத்திதிகளுக்குப் பின்வரும் பதின் மூன்றாம் நாளிலே வருகின்றன இந்த மூன்று மணித்தியாலமும் சிவவழிபாட்டிற்கு சிறந்த காலமாகும். பிரதோச காலத்தில் சிவவழிபாடு செய்பவர்களுடைய பாவங்கள் அழிக்கப்படும். சகல சஞ்சலங்களும் விலகி மங்களமாய் வாழ்வார்கள்.

கதை

முன்பெருகாலத்தில் தேவர்களும் அசுரர்களும் சேர்ந்து அமிர்தம் பெற விரும்பினார்கள். அதற்கு பாற்கடலை கடைய வேண்டியிருந்தது. மகாமேருவை மத்தாகவும், வாசுகியை கயிறாகவும் கொண்டு பாற்கடலைக் கடைந்தபோது வாசுகிப் பாம்பு வேதனை பொறுக்க முடியாது விசத்தைக் கக்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்விஷம் கருநீலநிறமாகவும், வெப்பமாகவும், யாரும் அணுகமுடியாமலும் இருந்ததால் தேவர்கள் அஞ்சி ஓடினார்கள். விஷமும் இவர்களைத் துரத்திச் சென்றது.

தேவர்கள் கயிலைமலைக்கு வலப்பக்கமாகச் செல்ல நஞ்சு இடப்பக்கமாகச் சென்று அவர்களை எதிர்கொண்டது. தேவர்கள் வந்த வழியே திரும்பி ஓடிவந்து இவர்களை எதிர்கொண்டதும் இப்படி மாறி மாறி நிகழ தேவர்கள் மிக மிகப் பயந்து ஓலமிட்டார்கள்.

இறைவன் கருணை கொண்டு ஆலால சுந்தரரை அனுப்ப அவர் அந்த ஆலகால விஷத்தைத் திரட்டி வந்து அரசனிடம் கொடுக்க அவர் அதை அருந்தி தமது கண்டத்தில் அடக்கி நிலை நிறுத்தினார். அதனால் அவருக்கு "நீலகண்டர்" என்ற திருநாமம் உண்டாயிற்று. இது நடந்தது ஒரு மாசிமாத வளர்பிறை திரயோதசித் திதியும் சனிக்கிழமையும் சேர்ந்த பிரதோஷ காலத்திலேயாகும்.

பயந்த தேவர்களை மகிழ்விக்க இறைவன் இடபதேவரின் கொம்புகளுக்கிடையில் நின்று நடனம் செய்தருளினார். நஞ்சுக்குப் பயந்து நந்தி பகவானின் வயிற்றில் ஒழித்திருந்த தேவர்கள் பயம் நீங்கி மகிழ்ச்சியுடன் இறைவனை வழிபட்டார்கள். இதனால் சனிக்கிழமையில் வரும் பிரதோஷம் மிகவும் சிறப்புடையது.

தேவர்கள் திரும்பவும் பாற்கடலைக் கடைந்தபோது அமிர்தம் தோன்றியது. அமரர்கள் ஆனந்தமாக அமிர்தம் உண்டனர். இறைவன் ஆனந்த நடனம் ஆடினார். இச்சம்பவம் நடந்தது ஒரு சித்திரைமாத திரயோத சித்திதி பிரதோஷ காலமாகும். இந்நாளை "மகா பிரதோஷ காலம்" என அழைப்பார்கள்.

முதன் முதலாக பிரதோஷ விரதம் இருப்பவர்கள் சித்திரைமாத வளர்பிறை பிரதோஷ காலத்தில் ஆரம்பிக்கலாம். அல்லது ஒரு சனிப்பிரதோஷ காலத்தில் ஆரம்பிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விரதமுறை

விரதநாளில் பகல் உணவு தவிர்த்து சிவ சிந்தனையுடன் இருந்து மாலையில் மீண்டும் நீராடி வெண்ணிற ஆடை அணிந்து சிவாலயம் சென்று சிவனைத் தரித்து மௌனமாக இருந்து வழிபட வேண்டும். திருமுறை ஓதுதல் ஆகாது.

பிரதோஷகாலத்தில் வலம்வரும் முறையை அறிந்து அதன்படி வலம் வந்து நந்தியின் இரு கொம்புகளினடையே சிவதரிசனம் செய்தபின் பிரதோஷகாலம் முடிந்தபின் வீட்டிற்குச் சென்று திருமுறைகள் ஓதியபின் உணவருந்தலாம்.

பிரதோஷகாலம் வலம்வரும் முறைக்கு "சோம சூத்திரப் பிரதஷிணம்" என்று பெயர் பிரதோஷ காலத்தில் சிவனுக்கும் நந்திக்கும் அன்ன நைவேதியங்களுடன் "காப்பரிசியும் நிவேதனம் செய்ய வேண்டும்.

பச்சரிசியையும் பயற்றம் பருப்பையும் நன்றாக நீரில் நனையவைத்து வடித்தெடுத்து சர்க்கரையும் தேங்காய்ப்பூவும் சேர்த்து (உப்பு சேராமல்) குழைத்தெடுப்பதே "காப்பரிசியாகும்".

பிரதோச காலத்தில் எண்ணெய் தேய்த்தல், குளித்தல், போசனம் செய்தல், தூங்குதல் கூடாது. மந்திரஜபம், திருமுறைபடித்தல், ஓதுதலும் கூடாது. மௌனமாக இருந்து வணங்குதலே முறையாகும் என்று புராணங்கள் விதிக்கின்றன.

சித்திரை, வைகாசி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் வரும் பிரதோஷ காலத்திலும் (சனிவாரம் சேர்ந்தால் விஷேஷம்) விரதம் கையேற்கலாம். இவ்விரதம் ஒரு வருடகாலம் (24 பிரதோஷகாலங்கள்) அனுஷ்டித்தபின் விரதம உத்தியாபனம் செய்ய வேண்டும். பின்பு திரும்பவும் ஆரம்பிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடன் தொல்லையால் அவதிப்படுகின்றவர்கள் அதிலிருந்து விடுபடுவர். வறுமையால் வாடுகின்றவர்கள் நிச்சயம் நிவாரணம் அடைவார்கள். நாள்பட்ட நோய் தீர்க்க முடியாத காயங்களால் தொல்லைப்படுபவர்கள் சுகம் அடைவார்கள்.

எதிரி பயம், துர்மரணங்கள், குடும்பப் பிரச்சினைகளிலிருந்து விடுபடுவார்கள்.
மேலான மோட்ச லோக பதவியையும் அடைவார்கள்.

இந்நாளில் வில்வார்ச்சனை செய்தல் நந்திக்கும் சிவனுக்கும் பூமாலை சாத்துதல் காப்பரிசி நிவேதனம் செய்தல் சிறந்த சிவகைங்கரியம் ஆகும்.

## பிரதோஷ காலத்தில் சிவாலயத்தை வலம் வரும் முறை

(சோம சூத்திரப் பிரதட்ஷிணம்)

1. நந்தியை வணங்கி இடமாகச் சென்று சண்டே சுரரை வணங்குதல்.
2. சண்டேசுரரிடமிரந்து திரும்பி நந்தியை அடைந்து வணங்குதல்.
3. நந்தியிடமிருந்து வலமாகச் சென்று கோமுகை வரை சென்று வணங்கல். (கோமுகையைக் கடக்கக்கூடாது)
4. அங்கிருந்து திரும்பவும் நந்தியை அடைந்து வணங்குதல்.
5. நந்தியிலிருந்து இடமாகச் சென்று சண்டேசுரரை வணங்கல்.
6. அங்கிருந்து திரும்பிவந்து நந்தியை வணங்காது கோமுகை வரை சென்று வணங்கல்.
7. அங்கிருந்து நந்தியை வணங்காது சண்டேசுரர் வரை சென்று வணங்கல்.
8. அங்கிருந்து திரும்பி வந்து நந்தியை அடைந்து சிவதரிசனம் செய்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவக்கிரகங்களைப் பற்றி நீங்கள் அறிந்து கொள்ள வேண்டிய சில விஷயங்கள்.

### நவக்கிரகங்களுக்குரிய வழிபாட்டு ஸ்தலங்கள் :

| | |
|---|---|
| சூரியன் | - சூரியனார் கோவில் (ஆடதுறை) |
| சந்திரன் | - திங்களூர் |
| செவ்வாய் | - வைத்தீஸ்வரன் கோவில், பழனி |
| புதன் | - மதுரை சொக்கநாதர் ஆலயம், விஷ்ணு ஆலயங்கள் |
| குரு | - திருச்செந்தூர், ஆலங்குடி (மயிலாடுதுறை) |
| சுக்கிரன் | - ஸ்ரீரங்கம், கஞ்சனூர் (கும்பகோணம் அருகில்) |
| சனி | - திருநள்ளாறு, குச்சனூர் (தேனி அருகில்) |
| ராகு | - திருநாகேஸ்வரம் (கும்பகோணம் அருகில்) |
| கேது | - காளஹஸ்தி (திருப்பதி வழி) |

### நவக்கிரகங்களுக்குரிய சமித்துகள் :

| | | | |
|---|---|---|---|
| சூரியன் | - எருக்கு | சுக்கிரன் | - அத்தி |
| சந்திரன் | - முருங்கை | சனி | - வன்னி |
| செவ்வாய் | - கருங்காலி | ராகு | - அறுகு |
| புதன் | - நாயுருவி | கேது | - தர்ப்பை |
| குரு | - அரசு | | |

### நவக்கிரகங்களுக்குரிய புஷ்பங்கள் :

| | | | |
|---|---|---|---|
| சூரியன் | - செந்தாமரை | சுக்கிரன் | - வெண் தாமரை |
| சந்திரன் | - வெள்ளலரி | சனி | - கருங்குவளை |
| செவ்வாய் | - சண்பகம் | ராகு | - மந்தாரை |
| புதன் | - வெண்காந்தன் | கேது | - செவ்வல்லி |
| குரு | - முல்லை | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவக்கிரகங்களுக்குரிய தானியங்கள் :

| | | | |
|---|---|---|---|
| சூரியன் | - கோதுமை | சுக்கிரன் | - மொச்சை |
| சந்திரன் | - பச்சரிசி | சனி | - எள்ளு |
| செவ்வாய் | - துவரை | ராகு | - உளுந்து |
| புதன் | - பச்சைப்பயிறு | கேது | - கொள்ளு |
| குரு | - கடலை | | |

## நவக்கிரகங்களுக்குரிய உலோகங்கள் :

| | | | |
|---|---|---|---|
| சூரியன் | - தாமிரம் | சுக்கிரன் | - வெள்ளி |
| சந்திரன் | - ஈயம் | சனி | - இரும்பு |
| செவ்வாய் | - செம்பு | ராகு | - கருங்கல் |
| புதன் | - பித்தளை | கேது | - துருக்கல் |
| குரு | - பொன் | | |

## நவக்கிரகங்களுக்குரிய ரத்தினங்கள் :

| | | | |
|---|---|---|---|
| சூரியன் | - மாணிக்கம் | சுக்கிரன் | - வைரம் |
| சந்திரன் | - முத்து | சனி | - நீலக்கல் |
| செவ்வாய் | - பவளம் | ராகு | - கோமேதகம் |
| புதன் | - மரகதம் | கேது | - வைடூரியம் |
| குரு | - புஷ்பராகம் | | |

## நவக்கிரகங்களுக்குரிய திசைகள் :

| | | | |
|---|---|---|---|
| சூரியன் | - நடுமையம் | சுக்கிரன் | - கிழக்கு |
| சந்திரன் | - தென்கிழக்கு | சனி | - மேற்கு |
| செவ்வாய் | - தெற்கு | ராகு | - தென்மேற்கு |
| புதன் | - வடகிழக்கு | கேது | - வடமேற்கு |
| குரு | - வடக்கு | | |

## நவக்கிரகங்களுக்குரிய தேவதைகள் :

| | | | |
|---|---|---|---|
| சூரியன் | - சிவன் | சுக்கிரன் | - லெட்சுமி |
| சந்திரன் | - பார்வதி | சனி | - யமன் |
| செவ்வாய் | - முருகன் | ராகு | - பத்திரகாளி |
| புதன் | - விஷ்ணு | கேது | - இந்திரன் |
| குரு | - பிரமன் | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவக்கிரகங்களுக்குரிய வாகனங்கள் :

| | | | |
|---|---|---|---|
| சூரியன் | - மயில்தேர் | சுக்கிரன் | - கருடன் |
| சந்திரன் | - கரிமுத்து விமானம் | சனி | - காகம் |
| செவ்வாய் | - அன்னம் | ராகு | - ஆடு |
| புதன் | - குதிரை | கேது | - சிங்கம் |
| குரு | - யானை | | |

## நவக்கிரகங்களுக்குரிய வர்ணங்கள் :

| | |
|---|---|
| சூரியன் | - மஞ்சல், பொன் நிறம் |
| சந்திரன் | - வெள்ளை, வெளிர் மஞ்சள் |
| செவ்வாய் | - சிகப்பு, கருஞ்சிகப்பு |
| புதன் | - ஆழ்ந்த பச்சை நிறம் |
| குரு | - ஆரஞ்சு, ரோஸ், தாமரைப்பூ வர்ணம் |
| சுக்கிரன் | - சாம்பல் வர்ணம் |
| சனி | - நீல நிறம் |
| ராகு | - வெளிர் நீலம், மஞ்சள் |
| கேது | - லேசான மஞ்சள், வெளிர்பச்சை, நீலம், வெள்ளை |

## நவக்கிரகங்களுக்குரிய சுவைகள் :

| | | | |
|---|---|---|---|
| சூரியன் | - காரம் | சுக்கிரன் | - இனிப்பு |
| சந்திரன் | - உப்பு | சனி | - கைப்பு |
| செவ்வாய் | - துவர்ப்பு | ராகு | - புளிப்பு |
| புதன் | - உவர்ப்பு | கேது | - புளிப்பு |
| குரு | - இனிப்பு | | |

## நவக்கிரகங்களுக்குரிய ஸ்த்திரங்கள் :

| | | | |
|---|---|---|---|
| சூரியன் | - சிவப்புப்பட்டு | சுக்கிரன் | - வெண்பட்டு |
| சந்திரன் | - வெள்ளைப்பட்டு | சனி | - கறுப்புப்பட்டு |
| செவ்வாய் | - சிகப்புப்பட்டு | ராகு | - கறுப்பு, வஸ்த்திரம் |
| புதன் | - பச்சைப்பட்டு | கேது | - பல கலர் கலந்த வஸ்த்திரம் |
| குரு | - மஞ்சல்பட்டு | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவக்கிரகங்களுக்குரிய எண்கள் :

| | | | |
|---|---|---|---|
| சூரியன் | - 1 | சுக்கிரன் | - 6 |
| சந்திரன் | - 2 | சனி | - 8 |
| செவ்வாய் | - 9 | ராகு | - 4 |
| புதன் | - 5 | கேது | - 7 |
| குரு | - 3 | | |

## ஆங்கில எழுத்துக்களுக்குரிய எண்கள்

| | | |
|---|---|---|
| AJIY | - | 1 |
| BKR | - | 2 |
| CGLS | - | 3 |
| DMT | - | 4 |
| EXHN | - | 5 |
| UVW | - | 6 |
| OZ | - | 7 |
| PF | - | 8 |
| Q | - | 9 |

## கிரகத்திரயம்

| | |
|---|---|
| சரக்கிரகங்கள் | - சந்திரன், செவ்வாய், ராகு, கேது |
| ஸ்த்திரக் கிரகங்கள் | - சூரியன், சுக்கிரன் |
| உபயக் கிரகங்கள் | - புதன், குரு, சனி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருமல் நோய்

### மருத்துவம்

இந்நோயில் ஐயமிகுதியை தன்னிலைப் படுத்தவும் தன்னளவில் மிகுதிப்பட்டெழுந்த மேல்நோக்குங் காலைப் தன்னிலைப்படுத்தவும், கோழையை வெளிப்படுத்தவும் தகுந்த பரிகாரங்களை புரிதல் வேண்டும்.

முதலில் ஐயத்தின் வன்மையை குறைக்க

* சஞ்சீவி மாத்திரை
* அட்டபைரவ மாத்திரை
* வச்சிர கண்டி மாத்திரை
* லவங்காதி மாத்திரை

மேகநாதக் குளிசை வான மெழுகுடன் சேர்த்து ஒரு வேளை கோரோசனத்தூள் உத்தாமனித் தைலம் என்னும் மாந்த எண்ணை இதியாதி பேதி மருந்துகளில் ஒன்றைத் தக்க அளவில் கொடுத்தல் நலம்.

அதன் மிகுந்த குற்றம், மேலெழுந்த வாயு சளி இவைகளுக்கான மருந்துகள் கொடுக்க வேண்டும்.

அவைகளாவன :

01. சிறிதளவில் ஐயம் கூடி நீர் பாய்தல் தும்ம்ல் தொண்டை கட்டல் என்னும் குறிகள் காணின்.
    தும்பைப் பூ வராகன் எடை
    மிளகு $^1/_2$ வராகன் எடை

அரைப்பு தேன் இதனை நன்கு கூறாக்கி காலையும் மாலையும் ஒவ்வொன்றாய் இருதினங்கள் சாப்பிடக் குணமாகும். தேவைப்படின் 5 தினங்கள் உண்ணலாம்.

* தும்பை இலைச்சாற்றைத் தூளாக்கி துவட்டிக் திரியாக்கி மூக்கிடவும்
* நீர்க்கோவை மாத்திரையை தேசிப்புளிச்சாற்றில் அரைத்து நெற்றியில் பற்றிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ பனுகு செம்பருத்தி விதை பருப்பு சம எடை கொண்டு அகத்திப் பூச்சாற்றால் அரைத்து, நெற்றி, புருவம், மூக்குதண்டில் பற்றிடலாம்.

★ மஞ்சல் மிளகு வெடியுப்பு சமஎடை கொண்டு பொடித்து துணியில் முடித்து புகை பிடிக்கலாம்.

நாட்பட்ட இருமலாயின்

★ தாலிசாதி சூரணம் 500 மிகி - 1 கிராம்

★ கஸ்துரிக் கருப்பு 1 குன்றி அளவு

★ பவளபற்பம் 1 குன்றி அளவு

★ தேன் அறுபானமாக காலை மாலை இரு வேளை 5 தினங்கள் உட்கொள்ளலாம்.

★ கண்டங்கத்தரி லேகியம்

★ நெல்லிக்காய் லேகியம்

★ ஆடாதோடை லேகியம் ஏதாவது ஒன்றைத் 5 கி அளவில் காலை மாலை இரு வேளையாக 5 தினங்கள் உட்கொள்ள வேண்டும்.

★ கண்டாவிழ்தத்தை முத்து அல்லது பவளபற்பம் சேர்த்து கொடுக்கலாம்.

★ கர்ப்பூராதி சூரணம் 600அப - 1ப வரை தேன் அல்லது கற்பூரவள்ளி இலைச்சாறு அல்லது தாளிசபத்திரிக் குடிநீர் ஆகிய ஏதாவொன்றில் சேர்த்துக் கொடுக்க இருமல், மூச்சுக் கஸ்டம் குணமாகும்.

நாட்பட்ட இருமலில் கோழை அதிகமாகக் கட்டிப்பட்டு நாற்றத்துடன் வெளிவரின்

★ சிவனார் அமிர்தம்

★ தாளகக் கருப்பு

★ கஸ்த்தூரி கருப்பு

★ சிருங்கி பற்பம்

★ முத்து பற்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவள பற்பம் இவைகளில் ஒன்றை 1 குன்றி அளவில் தாளி சாதிசூரணம் 600mg - 1g உடன் தேனில் இழைத்து காலை மாலை இரு வேளை 1 மண்டலம் உட்கொள்வது நல்ல பலனைத்தரும்.

நாட்பட்ட இருமலுடன் இரைப்பு எனின்

- ☆ செம்பு பற்பம் 1 அரிசியெடை
- ☆ புனுகு 1 குன்றியெடை

கஸ்த்தூரிக் கருப்பு 1 குன்றி 60mg இரண்டு வேளை உத்தமாகாணிச்சாற்றுடன் கொடுக்கலாம்.

ஆயுள்வேத முறைப்படி

- ☆ புத்திராஜக் கற்கம், 1 குன்றி எடை இஞ்சிச் சாறு, தேன், புளித்தோடம் பழச்சாறு மூன்றும் கலந்தததில் கொடுக்கப்படும். இதனை மகரந்த அறுபானம் என வழங்கப்படும்.

புகையிருமலுக்கு

I. 1. திரிகடுகு சூரணம் மைபோலரைத்து சமஎடை வெள்ளைச் சர்க்கரை சேர்த்து 300mg காலையில் பசு நெய்யில் குழைத்து கொடுக்கலாம்.

II. திப்பிலியை போலரைத்து வஸ்திர காயம் செய்து குடிநீரிட்டுக் கொடுக்கலாம்.

III. திப்பிலி இரசாயனம் 5g தேனுடன் காலை மாலை இரு வேளை கொடுக்கலாம்.

IV. கண்டங்கத்திரி லேகியம் 5g அளவில் கொடுத்து வர இருமல் தீரும்.

இரத்த காசத்திற்கு

- ☆ இம்பூறல் குடிநீர் 30 - 60 ml இருவேளை
- ☆ இம் பூரல் அடை 1 காலை மாலை
- ☆ இம் பூரல் வடகம் 1 காலை மாலை
- ☆ தாளிசாதிச் சூரணத்தில் தேன் நலந்து காலை மாலை கொடுக்கலாம்.
- ☆ சீருங்கி பற்பகம் 60 - 100mg மேற்கூறிய வாறு கொடுக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோழை இருமலிற்கு

200g தேனை அடுப்பிலேற்றி காய்ச்சி சூடேறியதும் 20g மிளகு தூள் 20g பொரித் வெண்காரம் இவற்றை தேனில் கலந்து சாப்பிடலாம்.

குடிநீர் :

★ ஆடாதோடைக் குடிநீர்

அரத்தைக் குடிநீர் ஏதாவது ஒன்றை 30 - 60அட காலை மாலை குடிக்கலாம்.

மாத்திரை

★ மகாவசந்த குசுமாகரம் 1 மூன்று வேளை தேனுடன்
★ கஸ்தூரி மாத்திரை
★ கோரோசனை மாத்திரை
★ சாந்த சந்திரோதய மாத்திரை ஏதாவது ஒன்றை 2குளிகை காலை மாலை வெந்நீருடன் பருகலாம்.

பற்ப செந்தூரங்கள்

★ தானக பற்பம்
★ பவள பற்பம் பலகரைப் பற்பம்
★ சிற்பி பற்பம்
★ நத்தை பற்பம்
★ கஸ்த்தூரிக் கருப்பு

கோரோசனைக் கருப்பு எவையேனும் ஒன்றை 60-100அப எடுத்து திரிகடுகு சூரணத்தில் கலந்து தேன்விட்டு தினம் இருவேளை உட்கொள்ளலாம்.

வீட்டில் பயன்படுத்தும் இலகு பரிகாரங்களாவன

★ குழந்தைகட்கு இருமல் குணப்பட 1கி காணத்தை நீர் விட்டுக் கலக்கி 3மணி நேரத்துக்கு ஒரு முறை கொடுக்கலாம்.

★ வயோதிபர்கட்கு கபம் கட்டி இருமல் அதிகமாக இருந்தால் வால்மிளகைப் பொடி செய்து வேளைக்கு 4கி வீதம் தினசரி 3தரம் கொடுத்து வந்தால் குணப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பூரவல்லி இலையை வதக்கி சாறுபிழிந்து கோரோசனை மாத்திரையுடன் சேர்த்துக் குழந்தைகட்கு கொடுத்தால் இருமல் அடங்கும்.

★ ஆடாதோடை இலையை ஆனியில் வாட்டிச் சாறுபிழிந்து எடுத்துக் கொள்ள வேண்டும். இச்சாற்றில் தேன் கலந்து ஒரு மணிக்கொரு தரம் 2 மேசைக்கரண்டி கொடுத்து வர இரத்தமுடன் சளி வெளிவருதல் நிற்கும்.

★ மிளகு கிராம்பு ஆகிய இரண்டையும் வறுத்துத் தூள் செய்து வெற்றிலையில் வைத்துச் சாப்பிட்டால் இருமல் தீரும்.

★ ஆடாதோடையின் வேரைக் கஷாயம் செய்து தேனுடன் கலந்து குடிக்கக் கொடுத்து வருவதும் இருமலைத் தணிக்கும்.

★ மிளகுத் தூளும், பனைவெல்லமும் சமஅளவாகக் கலந்து சுண்டைக்காய் அளவு சாப்பிட்டால் சூட்டு இருமல் அடங்கும்.

★ கற்பூரவள்ளி இலைச்சாற்றுடன் கற்கண்டு சேர்த்து குழந்தைகட்கு உண்டாகும் இருமலுக்கு 1தே.க. தினம் 2வேளை கொடுக்கலாம்.

★ விஷ்ணு கரத்தைச் செடியை வேரோடு பிடுங்கி நன்கு கழுவி அரைத்து பசுவின் பாலில் கலந்து (கொட்டைப் பாக்கு பிரமாணம்) காலை வேளையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டு வந்தால் குணமாகும்.

★ மாதுளை மொக்கு 25கி அளவு எடுத்து நைந்து அத்துடன் 200மி.லி நீர் விட்டு நன்றாக காய்ச்சி கொதிக்க வைத்து இறக்கி வடிகட்டி இருபாகமாக்கி அத்துடன் 1தே.க தேன் கலந்து 2வேளை அருந்தினால் போதும் இருமல் குணமாகும்.

★ அடிக்கடி வறட்டு இருமலாக இருக்குமானால் சிற்றரத்தையில் ஒரு சிற்றுண்டை எடுத்து வாயில் அடக்கி வைத்திருந்தால் போதும் அதிலிருந்து சுரக்கும் காரநீர் இறங்க இருமல் மட்டுப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ கற்பூரவள்ளி இலைச்சாறு 1தே.க தேன் 1தே.க கலந்து அருந்திவர 3வேளையிலே சாதாரண இருமல் குணமாகும்.

★ தூதுவளை? கண்டங்கத்தரி வேர், வகைக்கு 50கிராம் அளவு எடுத்து சுத்தப்படுத்தி காயவைத்து இடித்து சூரணமாக்கி கொள்ள வேண்டும். பின் கடுக்காய்த் தோல் 15கிராம் அளவு எடுத்து அதையும் இடித்துத் தூளாக்கி கொண்டு இரண்டையும் ஒன்று சேர்த்து வேளைக்கு திரிகடியளவு வீதம் தேனில் குழைத்து தொடர்ந்து சாப்பிட்டு வர சளித்தொல்லையும் இருமலும் குணமாகும்.

★ தூதுவளை, திப்பிலி, முருங்கைப்பட்டை வகைக்கு 50கிராம் எடுத்து காயவைத்து இடித்து சூரணமாக்கி கொண்டு வேளைக்கு திரிகடியளவு எடுத்த பகம் நெய்யில் கலந்து ஒரு நாளைக்கு 2 வேளையாக உண்டு வந்தால் நலம்.

★ ஆடாதோடை, கண்டங்கத்தரி, துளசி வகைக்கு 250 கிராம் அளவு எடுத்து நைத்து ஒரு பாத்திரதிலிட்டு 10 லீற் நீர் ஊற்றி அதில் 1/4 பாகமாக காய்ச்சி வடிகட்டி வைத்து வேளைக்கு 50மி.லீ கஷாயம் வீதம் எடுத்து அத்துடன் திரிகடியளவு திப்பிலி சூரணத்தைப் போட்டு நலந்து காலை, மாலை 2 வேளையாக தொடர்ந்து சாப்பிடலாம்.

★ திருநீற்றுப் பச்சை இலைச்சாறு தூதுவளை இலைச்சாறு சம அளவு எடுத்து 200மி.லி பசுப்பாலில் கலந்து காலையில் வெறு வயிற்றில் தொடர்ந்து சாப்பிட்டு வர சளி முறிந்து வெளியாகும்.

★ திப்பிலியை பொன்மேனியாக வறுத்து இடித்து சலித்த சூரணத்தில் ரோகத்தின் வன்மை மென்மைக்கேற்ப வேளைக்கு 5 - 10 கு.எ தேள் அல்லது சர்க்கரையில் மத்தித்து தினம் 2 வேளை கொடுக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5கி எடை திப்பிலியை பொடித்து 10அவுன்ஸ் ஜலத்தில் போட்டு அடுப்பிலேற்றி 3 அளவுத்திட்டத்திற்குக் காய்ச்சி வடிகட்டி 2வேளையாக சிறிது தேன் கலந்து கொடுக்கவும்.

★ விஷ்னு கிராந்தி சமூலத்தில் 1- 1 1/2 பலத்தை ஒன்றிரண்டாக இடித்து ஒரு மட்கலத்தில் போட்டு 1/2 படி நீர் விட்டு 1/4 படியாக சுண்டக்காய்ச்சி வடிகட்டி வேளைக்கு 2 - 3 அளவு வீதம் தினம் 3 வேளை பெரியவர்கட்கு கொடுக்கலாம்.

★ பிரண்டையும் உப்பு, புளி, மிளகாய், கூட்டி அரைத்து துவையலாகவும் அல்லது வேகவைத்த பிரண்டையை உப்பிட்ட மோரில் போட்டு உலர்த்தி வற்றலாகவும் உபயோகிக்கலாம்.

★ விரலி மஞ்சளை விளக்கெண்ணை விளக்கிலே சுட்டு அதன் புகையை மூக்கினால் உறிஞ்சினால் நெஞ்சுச் சளி மாறும்.

★ வெந்நீரில் கழுவி சுத்தம் செய்யப்பட்ட 50கி கொடி முந்திரிகைப் பழத்தைக் 1/2 லிற் பசுவின் மோரில் போட்டு கொதிக்க வைக்க வேண்டும். பழங்கள் நன்கு வெந்த பின்பு அவற்றை ஒவ்வொன்றாக சுவைத்து சாப்பிட்டு கடைசியாக அந்தப்பாலையும் பருகிவிட வேண்டும். ஜலதோசம் தணிந்து விடும்.

★ பேரீச்சம்பழத்தை பாலில் வேகவைத்து வெறும் வயிற்றில் சாப்பிட்டால் இருமல் அகன்று விடும்.

★ மிளகையும் கரும்பு வெல்லத்தையும் சேர்த்து அரைத்து வெறும் வயிற்றில் சுண்டைக்காயளவு 2 உருண்டைகள் சாப்பிட்டு வந்தால் ஜலதோசம் சளி இருமல் குணமாகும்.

★ அப்போதே கறந்த பசுவின் பாலைக் காய்ச்சி 4 சிட்டிகை மஞ்சல் தூள் கலந்து காலை வேளையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டால் தீராத இருமலும் தீர்ந்து விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☆ ஆப்பிள் பழங்களை நாள்தோறும் வெறும் வயிற்றில் 1 வார காலம் சாப்பிட்டு வந்தால் வறட்டு இருமல் குணமாகி விடும்.

☆ கருந்துளசி இலைகளை ஆவியில் வேகவைத்து சாறுபிளிய வேண்டும். அதில் 10 - 12 துளிகளை 1 வயதுக் குழந்தைகட்கு 1/2 தே.க. 2 - 5 வயது வரை உள்ள குழந்தைகட்கும் கொடுக்க மார்பு சளி இழகி இருமல் குணமாகும்.

☆ அன்றாடம் அதிகாலை 5 - 10 கி வரை உள்ள கருந்துளசி இலைகளை மென்று தின்ன வேண்டும். அல்லது கருந்துளசிச்சாறு இஞ்சிச் சாறு ஆகியவற்றை வேளைக்கு 2 தே.க. கலந்து அத்துடன் 1 தே.க. தேன் கலந்து தினம் 2 வேளையாக 3 நாட்களுக்கு சாப்பிட மூச்சுப்பிடிப்பு குணமாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிடங்கள் கட்டும் போது தெற்கைவிட வடக்குப் பக்கத்தில் காலி இடம் அதிகமாக விட்டு கட்ட வேண்டும்.

அதே போல மேற்குப் பக்கம் இடம் குறைவாகவும், கிழக்குப் பக்கம் காலி இடம் அதிகமாகவும் விட வேண்டும்.

கட்டிடத்தின் உயரம் தெற்கிலும், மேற்கிலும் உயர்ந்து இருக்க வேண்டும்.

வடக்கிலும், தெற்கிலும் உயரம் குறைவாக இருக்க வேண்டும்.

1. செல்லர் (Celler) கட்டும் போது அதை வடக்கு - கிழக்கு அல்லது வடகிழக்கில்தான் அமைத்துக் கொள்ள வேண்டும்.

2. வீட்டுக்கு பால்கனிகலும், பிளாட்பாரங்களும் வடக்கு - கிழக்குப் பக்கங்களில் கட்டுவது சிறப்பானதாகும். அதன் தரை மட்டம் வீட்டின் தரைமட்டத்தை விடத் தாழ்வாக இருப்பது நல்லது. மேலும் பால்கனிகளின் மேல் கூரையும், வீட்டின் சீலிங்கைவிட (Ceiling) தாழ்ந்து இருக்க வேண்டும்.

3. மேல்தளம் (Terrace) வடகிழக்கு, வடக்கு, கிழக்குப் பகுதியில் இருக்கலாம்.

4. தெற்கு, மேற்கு பக்க சுவர்கள் அகலம் அதிகமாகவும், வடக்கு, கிழக்கு சுவர்களின் அகலம் சற்று குறைவாகவும் இருக்க வேண்டும்.

5. மதில் சுவர்கள் (Compound Walls) வடக்கிலும், கிழக்கிலும் தாழ்ந்தும், மேற்கிலும், தெற்கிலும் உயர்ந்தும் இருக்க வேண்டும்.

6. வெராண்டாவின் மேல்தளம் வடக்கிலும், கிழக்கிலும் தாழ்வாக கட்டிடத்தின் மேல்தளத்தை விட தாழ்வாக இருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. கார் நிறுத்தும் இடங்கள், அவுட்ஹவுஸ், வேலையாட்கள் அறை ஆகியவற்றை தென்கிழக்கு அல்லது வடமேற்கு மூலையில் அமைத்துக் கொள்ள வேண்டும்.

ஆனால் அந்த அறைகள் காம்பவுண்டு சுவரை தொடாமல் இடைவெளி விட்டு கட்டவேண்டும். வடக்கு - கிழக்கு பக்கம் காம்பவுண்டு சுவரையோ, மெயின் கட்டிடத்தையோ இந்த அறைகள் தொடக்கூடாது.

இந்த அறைகளின் உயரம் முக்கிய கட்டிட உயரத்தைவிட குறைந்த உயரத்தில் இருக்கும்படி அமைக்க வேண்டும்.

8. போர்ட்டிகோ கிழக்கு, வடக்கு அல்லது வடகிழக்கில் சிறந்ததாக (Open Portico) அமைக்க வேண்டும். ஆனால் காம்பவுண்ட் சுவரைத் தொடக்கூடாது.

9. மரங்கள் அல்லது நிழல் தரும் மரங்களை தெற்கு. மேற்கு, பக்கங்களில் வைக்கலாம். ஆனால் கிழக்கு, வடக்கு பக்கங்களில் இந்த மரங்களை வைக்கக்கூடாது.

10. கட்டிடத்தில் காலி இடத்தின் அளவு வடக்கு, கிழக்கில்தான் தெற்கு, மேற்கைவிட அதிகமாக இருக்க வேண்டும்.

11. முதல் மாடியில் கதவு, ஜன்னல்கள் கீழ்வீட்டில் எப்படி இருக்கிறதோ அதன்படி அமைத்துக் கொள்ளலாம். கூடக் குறைய இருந்தாலும் தவறில்லை.

பிரதான வாயிலை வீட்டின் நடு மையத்தில் வைக்கவே கூடாது. கதவு வைப்பது வீட்டின் அந்தத் திக்கின் உச்சப் பகுதியில்தான் வைத்துக் கொள்ள வேண்டும். ஆனால் அதற்கான மூலையில் கொண்டுபோய் வைத்துவிடக் கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல் மாடிக் கதவுகளை கீழே இருக்கும் கதவுகள் இருக்கும் இடத்தை அனுசரித்து வைக்க வேண்டும்.

12. ஆர்.சி.சி (RCC Frames), காலம் (Columns), பீம் (Beams) எல்லாமே இரட்டைப் படையில் வரும்படி அமைக்க வேண்டும்.

13. கட்டிடத்தின் உயரம் தரை மட்டத்திலிருந்து ஒற்றைப்படை எண் வரும் அளவில் இருக்க வேண்டும். 1, 2, 5, 7, 9, 11, 13, 15 என்பதுபோல இருக்க வேண்டும்.

உயரம் 6 அங்குலத்தில் இருந்தால் பிளிந்த் (Plinth) உயரம் ஒரு அடி 1':6" அங்குலமாக இருக்கலாம். அல்லது 2':6", 3':6" என்று இருக்கலாம். தவிர ஒரு அடி, இரண்டு அடி, 3 அடி என்று மட்டும் இருக்கக் கூடாது.

அதேபோல ஒவ்வொரு மாடியின் உயரமும் 9':6" அடி, 10':6" அடி என்று இருக்க வேண்டும். ஆனால் 9 அடி, 10 அடியாக மட்டும் இருக்கக் கூடாது.

காரணம் என்னவென்றால் ஒருவர் படியில் மாடிக்கு ஏறும்போது அவரது வலது பாதம் முதலில் படியில் இருக்கும் போது அவர் அந்த வீட்டின் முதல் மாடி தடையை தொடும்படி தரை அமைப்பு (Floor) இருக்க வேண்டும். அதே போல முதல் மாடியில் அவர் தனது வலது காலைத்தான் தரையில் வைத்து உள்ளே வர வேண்டும்.

காரணம் வலது எப்போதுமே நல்ல பலன்களைத் தரும். வலது பக்கம் லாபமாகவும், இடது பக்கம் நஷ்டமாகவும் பாவிக்கப்படுகிறது. வலது காலை முதல் படியிலும், முதல் தளத்தில் வலது காலை வைப்பதாலும் லாபத்தைக் கொண்டு வருகிறோம். அதுதான் வாஸ்து சாஸ்திர விதியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. மெஸ்ஸானின் (Mezzanine) அமைப்பதனால் தெற்கு, மேற்கு பக்கங்களில் ஹாலிலும், சமயலறையிலும் அமைத்துக் கொள்ள வேண்டும்.

15. ஆபீஸ் அறை, படிக்கும் அறைகளின் மேசையை மேற்கு அல்லது தெற்குப் பக்கமாக போட வேண்டும். அதனால் உட்காருபவர் வடக்கு அல்லது கிழக்கு தியையைப் பார்த்து உட்கார முடியும். வடகிழக்கு ஈசானியத்தை பார்த்து உட்காருவது மிகவும் சிறப்பாகும். வடகிழக்கு ஈசானியம் தியானம் செய்வதற்கு மிக அருமையான திசையாகும்.

மேசைகள், சோபாக்கள், நாற்காலிகள், பெஞ்சுகள், அலமாரிகள், துணி வைக்கும் அலமாரிகள் (ருயசன சுழடிநள) ஆகியவற்றை வடக்கு, கிழக்கு சுவர் பக்கம் வைக்கக் கூடாது.

அப்படி அவசியம் வைக்க வேண்டுமானால் வடக்கு, கிழக்கு சுவரிலிருந்து ஆறு அங்குல இடைவெளி விட்டுத்தான் இவற்றை வைக்க வேண்டும்.

16. கட்டிடத்தின் வடக்கிழக்கு மூலையில் குப்பை கூளங்களை கொட்டவோ கூடாது. காலி சைட்டுகளிலும் வடகிழக்கிலும் ரப்பிஷ், தேவையில்லாத சாமான்கள் எதையும் போடவே கூடாது.

ஈசானிய மூலையை எப்போதும் சுத்தமாகவும், குப்பை கூளங்கள் இல்லாமலும் வைத்துக் கொள்ள வேண்டும்.

ஈசானியத்தில் எந்தவிதமான அடைப்பும் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

17. கட்டிடத்தின் வடகிழக்கு மூலையில் கதவுகள், ஜன்னல்கள் வைத்துக் கொள்ளலாம். அதே போல அறைகளுக்கும் ஈசானியத்தில் ஜன்னல். கதவுகள் வைத்துக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. வரவேற்பு அறை, உட்காரும் அறைகளில் (டுளைபெ சுழழஅ) சோபா, நாட்காலிகள், மேசைகள் போன்றவற்றை மேற்கு, தெற்கு சுவர் அருகில்தான் போட வேண்டும். தெற்கு, மேற்கு பக்கங்களில் போடுவதால் அதில் உட்காருபவர்கள் வடக்கு - கிழக்கு திசைகளை பார்த்து உட்காரலாம்.

மேலும் விருந்தினர்களை மேற்குப் பக்கம், தெற்குப் பக்கமாக உள்ள சோபா நாட்காலிகளில் உட்கார வைக்க வேண்டும். அவர்கள் வடக்கு, கிழக்கு திக்கைப் பார்த்து இருப்பது நல்லது.

19. பணம், நகைகள் ஆகியவற்றை வடக்கில் உள்ள அறையில் வைத்துக் கொள்ளலாம். ஆனால் இரும்புப் பெட்டிகள், கனமான அலமாரிகளில் நகைகள், பணத்தை வைக்கும் போது இந்த இரும்புப் பெட்டிகளை தெற்கு - தென்மேற்கு மூலைகளில் வைத்துக் கொள்ளலாம். லாக்கரை திறக்கும்போது பணம் எடுப்பவர் வடக்கு திசையைப் பார்த்து நின்று எடுக்கவோ, வைக்கவோ செய்யலாம்.

20. வீட்டில் உள்ள கனமான வீட்டு உபயோக சாமான்களை மேற்கு, தெற்கு, தென்மேற்கு பக்கங்களில் வைக்க வேண்டும்.

21. சமயலறையில் கிரைண்டர், ∴பிரிட்ஜ் போன்ற சாமான்களை தெற்கு, மேற்கு சுவர் பக்கம் வைக்க வேண்டும். சாமான்கள் வைப்பதற்கு காங்கிரீட் ஸ்லாப்புகள் மேற்கு, தெற்கு சுவர் பக்கங்களில் கட்ட வேண்டும்.

சமயலறையில் ∴பிரிட்ஜ் வைக்க இடமில்லாவிட்டால் ஹாலில் தெற்கு - மேற்கு சுவர் பக்கம் வைக்க வேண்டும்.

வடக்கு, கிழக்கு பக்கங்களில் சாமான்கள் எதுவும் வைக்காமல் காலியாக விட்டுவிடுவது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. முகம் பார்க்கும் எல்லா கண்ணாடிகளையும் வடக்கு, கிழக்க சுவரில் பதித்து வைத்துவிட வேண்டும். தெற்கு, மேற்கு சுவர்களில் கண்ணாடி வைக்கக் கூடாது. கைகழுவும் வாஷ்பேசின்களை வடக்கு, கிழக்கு சுவரில் பதிக்க வேண்டும்.

டாய்லட்டில்கூடி கண்ணாடியும், வாஷ்பேசினும் வடக்கு அல்லது கிழக்கு சுவர்களில்தான் பதிக்க வேண்டும். தரையில் தண்ணீர் ஊற்றினால் அதன் வாட்டம் (Slope) வடகிழக்கு மூலைக்குத்தான் போய்ச் சேர வேண்டும்.

23. சாப்பிடும் போது டைனிங்கஹாலில் கிழக்கு அல்லது மேற்கு முகமாகத்தான் உட்கார்ந்து சாப்பிட வேண்டும்.

24. கதவுகளில் ஷட்டர் ஒன்றுதான் இருக்க வேண்டும். இரண்டு கூடாது கதவைத் திறக்கும் போது அது இடது பக்கமாகத்தான் திறக்க வேண்டும். வலது பக்கம் அல்ல.

25. டெலிவிஷன் பெட்டியை உட்காரும் அறையில் தென்கிழக்குப் பகுதியில்தான் வைக்க வேண்டும். எந்த அறையில் டெலிவிஷனை வைத்தாலும் தென்கிழக்கு மூலையில் வைப்பதுதான் சிறப்பு.

26. படுக்கைகள் எல்லாம் தெற்குப் பக்கம் தலைவைத்து படுக்கும்படி கட்டிலைப் போட்டுக் கொள்ள வேண்டும். மேற்கு கிழக்கிலும் தலைவைத்து படுக்கலாம். ஆனால் வடக்கில் மட்டும் தலைவைத்துப் படுக்கக் கூடாது.

27. சூரிய ஒளியில் தன்னீர சூடாக்கும் கருவியை மொட்டை மாடியில் தென்கிழக்கு மூலையில் வைக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல்நிலை தண்ணீரத் தொட்டியை தென்மேற்கு மூலையில்தான் அமைக்க வேண்டும். மாடி கட்டிடங்களை மொட்டை மாடியில் தென்மேற்கு மூலையில் அமைத்துக் கொள்ள வேண்டும். மாடிப்படிகள், லிப்டுகளை தெற்கு - மேற்கு அல்லது தென்மேற்கு மூலையில் வைத்துக் கொள்ள வேண்டும்.

28. மழைநீர் மேற்கிலிருந்து கிழக்கிலும், தெக்கிலிருந்து வடக்கு பக்கமாக வந்து பிளாட்டின் வடிகிழக்கு மூலையில் போய் வெளியேற வேண்டும்.

29. கூடுதலாக கொசுவலைகள் வடக்கு, கிழக்கு கதவு, ஜன்னல்களுக்கு பதிக்கக் கூடாது.

30. கேட்களும், மெயின் வாயில் கதவுகளும் வடக்கு - வடகிழக்கு, கிழக்கு - வடகிழக்கு, தெற்கு - தென்கிழக்கு, மேற்கு - வடமேற்கு மூலைகளில் பிளாட்டுகளிலும், கட்டிடங்களிலும்தான் வைக்க வேண்டும்.

31. பூஜை அறை, தியான அறை வடகிழக்கில் இருக்க வேண்டும். சமயலறை தென்கிழக்கு மூலையில் அமைக்க வேண்டும்.

படுக்கை அறைகள் தென்மேற்கு, தெற்கு, மேற்கு ஆகிய திக்குகளில் இருக்க வேண்டும்.

தென்மேற்கு மூலையைவிட வடகிழக்கு மூலை லெவல் குறைந்து இருக்க வேண்டும்.

32. மெயின்கேட், மெயின் வாசலுக்கு எதிராக கம்பங்கள் (Posts) வேறு வீட்டு மூலைகள், மற்றும் தடங்கல்கள் இருக்கக் கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. வீட்டின் திறந்தவெளி சிற்பங்கள், கிராணைட் மற்றும் கற்களால் அமைந்த அலங்கார இடங்களை தென்மேற்கில்தான் வைத்துக் கொள்ள வேண்டும். அதிக பாரங்களை தென்மேங்கில்தான் ஏற்ற வேண்டும்.

34. தண்ணீர் சம்பந்தப்பட்ட போர்வெல், கிணறு, பூமிக்குக் கீழ் தண்ணீரத் தொட்டி ஆகியவை பிளாட்டுக்கு வடகிழக்கு ஈசானிய மூலை பகுதியில்தான் அமைத்துக் கொள்ள வேண்டும்.

தண்ணீர்த் தொட்டி, போர்வெல்கள், கிணறு எல்லாம் வீட்டு வாயில் கதவுகளுக்கு எதிரில் இருக்கக் கூடாது.

35. தரைமட்டம் பிளாட்டில் வடகிழக்கு மூலைதான் மற்ற மூலைகளைவிட தாழ்ந்து இருக்க வேண்டும்.

36. கழிவுநீர்கள் போகும் (Sewer) குழாய்கள் ஈசானிய மூலையைவிட்டு இரண்டு அல்லது மூன்று அடி தள்ளி போகும்படி அமைத்துக் கொள்ள வேண்டும்.

மற்றபடி மழைநீர், மற்ற கழிவு நீர்கள் ஈசானிய மூலை வழியே போக வேண்டும்.

37. முதல் மாடியில் கட்டிடம் அமைக்க வேண்டுமானால் கட்டிடத்தின் வடக்குப் பகுதியில் மாடியில் கட்டிடம் கட்டக்கூடாது. அதனால் பாதகம்தான் ஏற்படும். பணவிரயமும் பல சிரமங்களும் ஏற்படலாம்.

மாடியில் தெற்கில் அதாவது மாடி தரையை இரண்டு சம பாகமாக வடக்கு, தெற்காக பிரித்து தெற்கில் கட்டிடம் கட்டிக் கொள்வது நல்ல வாஸ்து பலன்களைத் தரும்.

தெற்கில் மாடியில் கட்டிடம் கட்டுவது நல்ல பலன் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கில் மாடியில் கட்டிடம் கட்டுவது நல்ல பலன் தரும்.


வடக்கில் கட்டிடம் மாடியில் கட்டினால் பாதகமான விளைவுகள் ஏற்படும்.

கிழக்கில் மாடியில் கட்டிடம் கட்டினால் பாதகமான பலன்தான் ஏற்படும்.

மாடியில் முழுவதும் கட்டிடம் கட்டிக் கொள்ளலாம்.

### மேல்மாடி **Terrace** இல் கட்டிடம்

| |
|---|
| மாடியில் வடக்குப் பகுதியில் கட்டிடம் கட்டக் கூடாது - கெடுதல் |
| தெற்குப் பகுதியில் கட்டிக் கொள்ளலாம் கல்லது |




மாடியில் வடக்குப் பகுதியில் மட்டும் கட்டக்கூடாது. காரணம் வடக்கு திக்கில் பாரம் இருக்கக் கூடாது. தெற்குப் பகுதியில் பாரம் ஏற்றலாம். தெற்கில் கட்டிடம் கட்டுவது நல்லது.

| | |
|---|---|
| மாடியில் மேற்குப் பகுதியில் கட்டலாம். நல்லது | கிழக்குப் பகுதியில் மட்டும் கட்டக் கூடாது |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடியில் கிழக்குப் பகுதியில் மட்டும் கட்டிடம் எதுவும் கட்டக்கூடாது. காரணம் கிழக்கில் பாரம் ஏற்றக்கூடாது. ஆனால் மேற்குப் பகுதியில் கட்டிடம் கட்டிக் கொள்வது நல்லது.

மாடி முழுவதும் கட்டிடம் கட்டிக் கொள்வதில் எந்தப் பிரச்சினையும் வராது. நல்ல பலன்களையே தரும்.

38. பிளாட்டுகள் மூலைகளில் வடகிழக்கு, தென்கிழக்கு, வடமேற்கு, தென்கிழக்கு திக்குகளில் இருந்தால் அதில் கட்டிடங்கள் கட்டும்போது கீழ்க்கண்ட விதிகளைப் பின்பற்ற வேண்டும்.

வடகிழக்கில் வீட்டுக்கு எவ்வளவு காலி இடம் விடுகிறோமோ அதே அளவு காலி இடம் தென்மேற்கு திக்கிலும் விட்டுவிட வேண்டும்.

அதே போல வட மேற்கில் எவ்வளவு காலி இடம் விடுகிறோமோ அதே அளவு காலி இடம் தென்கிழக்கிலும் விட்டு கட்டினால் நல்ல பலன்களை அடையலாம்.

39. மூலை பிளாட்டுகளுக்கு வடகிழக்கில் ரோடு இருக்குமானால் வடக்கு திசையில் கேட் வைத்துக் கொள்ளலாம். கிணறு, போர்வெல், சம்பி ஈசானியத்தில் அமைத்துக் கொள்ளலாம்.

40. தென்கிழக்குப் பக்கம் ரோடு உள்ள பிளாட்டுகளுக்கு கிழக்கில் கேட் வைத்துக் கொள்ளலாம். கிணறு ஈசானியத்தில் வடகிழக்கில் அமைத்துக் கொள்ளலாம்.

41. தென்மேற்கில் ரோடு உள்ள பிளாட்டுகளுக்கு மேற்கு உச்சப்பகுதியில் கேட் வைத்துக் கொண்டு ஈசானிய திக்கில் கிணறு, சம்ப், போர்வெல் முதலியவற்றை அமைத்துக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

42. வடமேற்கில் ரோடு உள்ள பிளாட்டுகளக்கு கிணறு வடகிழக்கில் அமைத்துக் கொள்ளலாம். கேட் வடக்கில் வைத்துக் கொள்ளலாம்.

43. கீழ்க்கண்ட தவறுகள் ஒரு கட்டிடத்தில் இரக்குமானால் அவை பல பிரச்சினைகளை அதில் குடியிருப்பவர்களுக்கு கொடுக்கும்.

## வாஸ்து தோஷங்கள்

1. வடக்குப் பகுதி வெட்டப்பட்டு இருப்பது.
2. வடகிழக்கில் டாய்லெட் இருப்பது.
3. வடகிழக்கில் மாடிப்படிகள் இருப்பது.
4. வடகிழக்கில் படுக்கையறை இருப்பது
5. சமயலறை வடகிழக்கில் இருப்பது.
6. சாமான்கள் அறை வடகிழக்கில் இருப்பது.
7. தவறான இடத்தில் வெயின் வாசல் கதவு இருப்பது.
8. திறந்த பால்கணிகள் மேற்கு, தெற்கு திசைகளில் இருப்பது.
9. ஈசானியத்தில் பால்கனிகள், வடக்கு - கிழக்கில் கதவு, ஜன்னல்கள் திறந்தவெளி இல்லாமலிருப்பது.
10. படுக்கை அறை தவறான இடத்தில் இருப்பது.

ஆகிய தவறுகள் வாஸ்து சாஸ்திரத்துக்கு எதிராக இருப்பதால் குடியிருப்பவர்களுக்கு பல பிரச்சனைகளைத் தரும்

இந்த தோஷங்களை சரிசெய்ய வேண்டுமானால் பணம் செலவு செய்துதான் சரிசெய்ய வேண்டும்.

வாடகை வீட்டில் குடியிரப்பவர்கள் இது போன்ற தோஷமுள்ள வீட்டில் இருந்து கஷ்டப்படுவதைவிட வாஸ்து சாஸ்திரப்படி ஓரளவுக்கு பெரிய தோஷங்கள் இல்லாத வீட்டுக்கு மாற்றிக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்த வீட்டுக்காரர்கள் தோஷங்களுக்கு கட்டிடத்தில் மேலே குறிப்பிட்ட தோஷங்களை அகற்ற வாஸ்து சாஸ்திரப்படி அமைக்க வாஸ்து நிபுவணங்களை அணுகி தேவையான மாற்றங்கள் அவர்கள் கொல்கிறபடி செய்து கொள்வதுதான் நல்லது.

45. உங்களது குடியிருப்பில் உங்கள் வீட்டுக் கதவுக்கு சரிநேர் எதிராக எதிர் பிளாட் காரர்கள் வாசல் கதவு இருக்கக் கூடாது.

ஆகவே உங்கள் வாயில் கதவை - வடகிழக்கு பக்கத்திற்கு மாற்றி வைத்துக் கொள்ளலாம். அதனால் இந்த தோஷம் நீங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஔவையார் அருளிய விநாயகர் அகவல்

சீதக்களபச் செந்தாமரைப்பூம்
பாதச்சிலம்பு பலவிசைபாடப்
பொன்னரைஞாணும் பூந்துகிலாடையும்
வன்னமருங்கில் வளர்ந்தழகெறிப்பப்
பேழைவயிறும் பெரும்பாரக்கோடும்
வேழமுகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சுகசுரமும் அங்குசபாசமும்
நெஞ்சிற்குடிகொண்ட நீலமேனியும்
நான்றவாயும் நாலிருபுயமும்
மூன்றுகண்ணு மும்மதச்சுவடும்
இரண்டுசெவியும் இலங்குபொன்முடியுந்
திரண்டமுப்புரிநூல் திகமொழிமார்பும்
சொற்பதங்கடந்த துரியமெய்ஞ்ஞான
அற்பதநீன்ற கற்பகக்களிறே
முப்பழநுகரு முகூஷிகவாஹன
இப்பொழுதென்னை யாட்கொளவேண்டித்
தாயாயெனக்குத் தானெழுந்தருளி
மாயாப்பிறவி மயக்கமருந்துத்
திருந்தியமுதலைத் தெழுந்துந்தெழிவாய்
பொருந்தவேவந்தென் னுளந்தனிற்புகுந்து
குருவடிவாகிக் குவலயந்தன்னில்
திருவடிவைத்துத் திறமிதுபொருளென
வாடாவகைதான் மகிழ்ந்தெனக்கருளிக்
கோடாயிதத்தாற் கொடுவினைகளைந்தே
உவட்டாவுபதேசம் புகட்டியென்செவியில்
தெவிட்டாதஞானத் தெளிவையுங்காட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐம்புலன்னை யடக்குமுபாயம்

இன்புறுகருணையின் இனிதெனக்கருளி
கருவிகளொடுக்குங் கருத்தினையருவித்
திருவினைதன்னை அறுத்திருகடிந்து
தலமொருநான்குத் தந்தெனக்கருளி
மலமொருமுன்றின் மயக்கமறுத்தே
ஒன்பதுவாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக்கதவை அடைப்பதுங்காட்டி
ஆறாதாரத் தங்குசநிலையும்
பேறாநிறுத்திப் பேச்சுரையறுத்தே
இடைபிங்கலையின் எழுத்தறிவித்து
கடையிற்சுழிமுனைக் கபாலமுங்காட்டி
மூன்றுமண்டலத்தின் முட்டியதூணின்
நான்றெழுபாம்பி னாவிலுணர்த்திக்
குண்டலியதனிற் கூடியவசபை
விண்டெழுமந்திரம் வெளிப்படவுரைத்து
மூலாதாரத்தின் மூன்டெழுகணலைக்
காலாலெழுப்புங் கருத்தறவித்தே
அமுதநிலையும் ஆதித்தனியக்கமுங்
குமுதசகாயன் குணத்தையுங்கூறி
இடைச்சக்கரத்தின் ஈரெட்டுநிலையும்
உடற்சக்கரத்தின் உறுப்பையுங்காட்டிச்
சன்முகதூலமுஞ் சதுர்முகசூஷ்மமும்
எண்முகமாக இனிதெனக்ருளிப்
புரியட்டகாயம் புலப்படவெனக்குத்
தெரியெட்டுநிலையுந் தெரிசனப்படுத்திக்
கருத்தினிற்கபால வாயில்காட்டி
இருத்திமுத்தி இனிதெனக்கருளி
என்னையறிவித் தெனக்கருள்செய்து
முன்னை விளையின் முதலைக்களைத்து
வாக்குமனமும் இல்லாமனோலயந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேக்கியேயென்றன் சிந்தைதெளிவித்
திருள்வெளியிரண்டும் கொன்றிடமென்ன
அருடருமானந்தத் தழுத்தியென்செவியில்
எல்லையில்லா ஆனந்தமளித்து
அல்லல்களைந்தே அருள்வழிகாட்டிச்
சத்தத்தினுள்ளே சதாசிவங்காட்டிச்
சிந்தத்தினுள்ளே சிவலிங்கங்காட்டி
அணுவிற்கணுவாய் அப்பாலுங்கப்பாலாய்க்
கணுமுற்றினின்று கரும்புள்ளேகாட்டி
வேடமுநீறும் விளங்கதிறுத்திக்
கூடுமெய்த்தொண்டர் குழாத்துடக்கூட்டி
அஞ்சக்கரத்தின் அரும்பொருடன்னை
நெஞ்சக்கருத்தி னிலையறிவித்துத்
தத்துவநிலையைத் தந்தெனையாண்ட
வித்தகவிநாயக விரைகழல்சரணே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவக்ரஹ தோஷம் நீங்க

### ஞாயிறு

சீலமாய்வாழ சீரருள் புரியும்
ஞாலம் புகழும் ஞாயிறே போற்றி
சூரியா போற்றி சுந்தரா போற்றி
வீரியா போன்றி வினைகள் தீர்ப்பாம்

### திங்கள்

எங்கள் குறைகள் எல்லாம் தீர்க்கும்
திங்களே போற்றி சற்குணா போற்றி
சந்திரா போற்றி சற்குணா போற்றி
சங்கடம் தீர்ப்பாய் சந்திரா போற்றி

### செவ்வாய்

சிறப்புறு மணியே செவ்வாய்த் தேவே
குறைவில்லாதருள்வாய் குணமுடன் வாழ
மங்கலச் செவ்வாய் மலரடி போற்றி
ஆங்காரஹனே அவதிகள் நீக்கு.

### புதன்

இதமுற வாழ இன்னல்கள் நீக்கு
புதபகவானே பொன்னடி போற்றி
பதம் தந்து ஆள்வாய் பண்ணொலியானே
உதவியாய் அருளும் உத்தமா போற்றி

### வியாழன்

குணமுள்ள வியாழ குருபகவானே
மணமுள்ள வாழ்வு மகிழ்வுடன் அருள்வாய்
பிரகஸ்பதி வியாழ பரகுருநேசா
கிரகதோஷ மின்றிக் கடாட்சித்தருள்வாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெள்ளி

சுக்கிர மூர்த்தி சுகமிக ஈவாய்
வக்கிரமின்றி வரமிகத் தருவாய்
வெள்ளிச் சுக்கிர வித்தக வேந்தே
அள்ளிக் கொடுப்பாய் அடியார்க்கருளே

## சனி

சங்கடம் தீர்க்கும் சனி பகவானே
மங்களம் பொங்க மனம் வைத்தருள்வாய்
சச்சரவின்றி சனீஸ்வரத் தேவே
இச்சகம் வாழ இன்னருள் தாதா

## ராகு

அரவேனும் ராகு ஐயனே போற்றி
கரவாதருள்வாய் கஷ்டங்கள் நீங்கி
ஆக அருள்புரி அனைத்திலும் வெற்றி
இராகு கனியே ரெம்மியா போற்றி

## கேது

கேது தேவே கீர்த்தித் திருவே
பாதம் போற்றி பாபம் தீர்ப்பாய்
வாதம் வம்பு வழக்குகள் இன்றி
கேது தேவே கேண்மையாய்

இந்த நவக்ரக ஸதோத்திரம் சொல்லி ஒவ்வொரு கிரகத்திற்கும் ஒரு மலர் வீதம் ஒன்பது மலரை இடவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவிலல்


எங்கள் குடும்பம் சிறக்க அவதரித்த
உதாரண புருஷன்
சிவஸ்ரீ. பொன் சுதந்திரன் குருக்கள் ஐயா அவர்களின்
மறைவின் போது சகல வழிகளிலும்

எமது இல்லறத்திற்கு சமூகமளித்து அனுதாபம் தெரிவித்து, ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும் நன்றிகள். மலர்களால் அஞ்சலி செலுத்திய அன்புள்ளங்களிற்கும், அன்னாரின் மறைவுச் செய்தியை வெளியிட்ட ஊடகங்களிற்கும், ஆலய அறங்காவலர், இந்துமா மன்றங்கள், அரச தனியார் அலுவலர்கள், சங்கங்கள், அமைப்புக்கள் அனைத்திற்கும் நன்றிகள். சிவச்சாரியார்களக்கும், பிற மதத்தவர்களுக்கும், அபரக்கிரியைகளிலும் இறுதியாகக் கலந்து கொண்டவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி, பிரசுரங்கள், பதாதைகள் வெளியிட்ட அன்புள்ளங்களிற்கும், போசனமளித்தவர்களுக்கும் கோடானகோடி நன்றிகள்.

அனுதாபம், ஆறுதல் மொழிகள் நேரிலும், அன்புடன் கூறியவர்களுக்கும் எல்லா வழிகளிலும் ஐயாவின் இறப்பிலிருந்து இன்று வரை உதவும் கரங்களிற்கும் உடலாலும், உள்ளத்தாலும் தொண்டு செய்த அன்பு நெஞ்சங்களிற்கும் உளங்கனிந்த நன்றியைத் தெரிவிப்பதோடு, இம் மலரினை அழகுற வடிவமைத்து அச்சேற்று கைளித்த அச்சக உரிமையாளருக்கும் ஏனைய ஊழியர்களிற்கும், ஆக்கங்கள் தந்துதவியவர்களிற்கும் பல் கோடி நன்றிகள் கூறும்

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதாந்த சாரம்



வருந்தப்பட வேண்டாததற்கு
வருத்தப்படுவது
அறிவாளிகளுடைய செயலல்ல !
மூன்று காலத்திலும்
எந்தப் பொருள் இல்லையோ
அதற்கு ஒரு காலத்திலும்
இருப்பு என்பதில்லை !
இருப்பதுபோல் தோன்றினாலும்
அது நிகழ்காலத் தோற்றம்
மட்டும் தான்!
மூன்று காலத்திலும்
எந்தப்பொருள் உள்ளதோ
அதற்கு ஒரு காலத்திலும்
இல்லாமை என்பதில்லை!
புலன்களுக்கு அகப்படாததை
இல்லை என்று சொல்லிவிட முடியாது !
ஆன்மா என்ற ஒன்றுதான் அழியாத
நிரந்தரமான உட்பொருள்!

- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் -

MERRY SELECTION MARUTHAMUNAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org